
# கீதை—சொற்பொழிவுகள்



4

பிரசுரிப்பவர்கள் :

## கீதா ஞான யக்ஞக் கமிட்டி

மதுரை.

# கீதை — சொற்பொழிவுகள்

25—8—56 முதல் 4—9—56 வரை
மதுரை ராஜாஜி விளையாட்டு மைதானத்தில்
நடைபெற்ற கீதா ஞான யக்ஞத்தில்

## ஸ்வாமி சின்மயானந்தா
## அவர்கள் நிகழ்த்திய

ஸ்ரீமத் பகவத் கீதை 13-ம் அத்தியாயம்
க்ஷேத்ர — க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

உபந்நியாச சாரம்
(2-ம் பாகம்)

MADURA TAMIL SAN

1956

வெளியிடுவோர்:

**கீதா ஞான யக்ஞக் கமிட்டி,**

267, ராமநாதபுரம் ரஸ்தா : **மதுரை.**

சுவாமிகளின் ஆங்கிலப் பிரசங்கங்களில்
நிறைந்த கருத்துக்களைத் தமிழில் மக்களுக்குத்
தந்துதவிய பேராசிரியர்:

**ஸ்ரீ T. சேஷாத்திரி, M. A., B. O. L,**

புு. கி. இராமாச்சாரி,
ரா. லெக்ஷ்மிகாந்தம்,
சிமன்லால் M. மோடி,
காரியதரிசிகள்.

மதுரை,
15—9—'56.

# அறிவது எப்படி?

அந்தத் "தத்துவத்தை" வார்த்தைகளின் உதவியைக் கொண்டு விளக்க உபநிஷதங்களின் மந்திரங்களையும் வாக்கியங்களையும் அவர் உபயோகிக்கிறார்.

இப்படி அந்த முழுமுதற் பொருளை லக்ஷணங்களுள் பிடிபடும் படி சொல்ல முற்பட்டவை உபநிஷதங்கள் தாம். உலகில் உள்ள மற்றச் சமய இலக்கியங்களில் எல்லாம் 'அந்தத் தத்துவம்' என்று சொல்லிவிட்டுச் சமயப்பிரசாரகர்கள் நகர்ந்துவிடுவார்கள். உபநிஷத ரிஷிகள் இந்தச் சுலோகங்களில் வார்த்தைகள் மூலம் அந்தக் கருத்தை உணர்த்திவிட முயன்றிருக்கிறார்கள். இந்த முயற்சியின் காரணமாகத் தான் அதைக் கொண்ட உபநிஷதங்கள் இன்று மதிப்பில் உயர்ந்து நிற்கின்றன. அவற்றைப் படித்தவர் எல்லாம் 'இங்கே மன அமைதியைக் காண்கின்றோம்! மனதுக்கு ஆறுதல் இங்கே தான் கிடைக்கிறது' என்கின்றனர். இந்தச் சொற்களின் கருத்தைத் தொடர்ந்து மனதைச்செலுத்தினால் மனது உச்ச நிலைக்கு உயர்த்தப்படுகிறது அந்த "ஞான சிகர"த்திலிருந்து மனிதன் முழு உலகத்தையும் பார்க்க முடிகிறது. உலகத்தில் தனக்குள்ள இடத்தையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

மனது அந்த எல்லையை அடைகிறபோது அந்த உண்மை உணரவும் படுகிறது. அது உணரப்பட்டாலும் சொல்லின் உதவி கொண்டு புத்தி ஊகித்தறியும் பொருளல்ல. ஏணியில் ஏறிய பிறகு 'அங்கே தெரிகிறது' என்று சொல்வதற்கில்லை. அதையே நெருங்கி எட்டிப் பிடித்தும் விடுகிறோம். அப்படித் தன் உள்ளத்துள் உணர்ந்தவர்கள்தான் இந்த நாட்டில் அந்தப் பரம்பொருள் தத்துவத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

மிகவும் குறைவான நேரமாயிருந்தாலும் சரி, அதாவது ஒரு செகண்டில் ஐந்நூறில் ஒரு பங்கு அளவு குறைந்த நேரமாயிருந்

தாலும்சரி போதும், அந்தத் தத்துவத்தை உணர முடியுமாளுல் அந்த நிலையில் இருப்பது ஞானம் மட்டும் தான். உடல், மனம், புத்தி என்றவை ஒழிய ஞானம் மட்டும் எஞ்சி நிற்கிறது.

இந்தப் பொருளை நாம் தேடிக்கொண்டு கைலாசமோ, வைகுண் டமோ போகவேண்டியதில்லை. அது எங்கும் நின்று ஒளிர்கிறது. உலகின் உயிர்கள் ஒளிபெற்று அந்த ஒளியையும் தம் பிரதிபலிப்பின் மூலம் காட்டித்தருகின்றன. பிரதிபலிக்கும் பொருள்கள் பலவாறு அமைந்திருக்கலாம். ஒரு உயிர்த் தோற்றம் அரண்மனையில் அரச குமாரனைப் பிறந்திருக்கலாம். மற்றொன்று ஒரு குடிசையில் குஷ்ட ரோகியின் சிசுவாகப் பிறந்திருக்கலாம். இரண்டுமே அந்த உயிர் ஒளியை ருசுப்படுத்தும் தோற்றங்களே.

இப்படி இந்தத் தோற்றங்களால் ருசுப்பிக்கப்பட்டு இவை களில் ஆதாரமில்லாமலேயே நிற்கும் அதுதான் இவைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. நல்லது செய்யும் தோற்றமோ கெட்டது செய்யும் தோற்றமோ எதுவாளுலும் அந்த இரண்டுக்கும் அடிப் படை, ஆதாரம், சக்தி எல்லாம் அது தான். சரித்திரம் என்றுமே ஒளி பொருந்திய நல்ல நிகழ்ச்சிகளின் கோவை அல்ல. ஒரு யுகம் நல்லதாக இருக்கும். நன்மை அலையின் உச்சியில் நடமாடும் யுக மாக இருக்கும். அந்த யுகம் சத்ய யுகம். மற்றொரு சமயம் கெட்ட அலையின் பள்ளத்தாக்கின் அடிப்பாகத்துக்கு வந்துவிடும். அது கலியுகம். இப்படி இந்தச் சக்கரம் சுழன்றேதான் வரும். இந்தச் சுழற்சியில் நல்லது கெட்டது என்ற இரண்டு விளைவுகளும் ஏற்பட லாம். ஆனல் இந்த இரண்டுக்கும் அடிப்படையில் இயங்கி ஆற்றல் அளிக்கும் ஊக்கம் அந்தப் பரம்பொருள் தான்.

ஆனல் நாம் இதை அறிந்துகொள்ள முடிவதில்லையே, ஏன்? கண், உலகில் உள்ள மற்ற எல்லாவற்றையும் பார்க்கும். ஆனல் ஒன்றை மட்டும் அது பார்க்க முடியாது. அதாவது கண்ணை அல்லது கண்ணிலுள்ள மணியைத்தான். அதேபோல் மனமும் புத்தியும்

அந்த ஊக்கத்தின் காரணமாகத்தான் இயங்குகின்றன. இவை அந்த ஊக்கத்தைவிட்டுத் தனித்து நின்ருல், தான் ஊக்கத்தைப் பார்க்க முடியும். அதைவிட்டு நகர்ந்தால் ஆற்றலும் உடனே தொலைந்து விடுமே; உணரும் ஆற்றலே போனபிறகு உணர்வது எப்படி? அதனுல் தான் அதை நேரடியாக உணர முடிவதில்லை. ஆனுலும் உணராமல் இருந்தால் நாம் மனிதராகச் சிறந்த முறையில் உலகில் பழகமுடியாது. அல்லது அந்த உண்மையைத் தெரிந்து கொண்டால் தான் நாம் உலகில் நன்கு பழகத்தெரிந்தவர்களாக ஆகமுடியும். ராகம் தாளம தெரியாதவன் பாடமுடியாது. தபேலாச் சத்தம் காதில் கேட்காத செவிட்டு நாட்டியக்காரன் சரியாக ஆட முடியாது. அதைப்போல இந்தத் தத்துவத்தை உணராதவன் சிறந்த பழக்கத்தை அறிந்து கொள்ள முடியாது. அந்தத் தத்துவத்தைத் தான் 'பிரம்மன்' என்று சொல்கிருேம்.

அதை அறிவதற்குத்தான் மனதுக்கும் புத்திக்கும் கொடுக்கப் பட வேணடிய பயிற்சிகள் பதினெட்டும் சொல்லப்பட்டன. அந்தப் பயிற்சி பெற்ற மனதும் புத்தியும் வேறு விவரம் தேவையின்றி உடனேயே உணர்ந்துவிடுகின்றது. அப்படி அறிகின்றதை ஆங்கிலத்தில் 'இன்ட்யூஷன்' என்கிருேம். ஸம்ஸ்கிருதத்தில் ஞானதிருஷ்டி என்று சொல்லலாம். தானுகவே ஒரு நிலையில் புத்திக்கு சில ஞானம் பிடிபட்டுவிடும். அதுதான் 'இன்ட்யூஷன்' என்பது. அதேபோல மேலே கூறிய பதினெட்டு நற்பயிற்சிகளையும் பெற்றுச் சரியான பாதையில் திருப்பி வைக்கப்பட்ட மனது புத்தி சூக்ஷமமாகிவிட்டால் அந்தத் தத்துவத்தைத் தானே உணர்ந்து விடுகிறது.

இப்படி ஒரு பொருளை நோக்கி நின்று அந்தப் பொருள் பக்கம் பார்வையைச் செலுத்தி அதே பார்வைக்கோட்டில் மேலே இருக்கும் மற்ருெரு பொருளைப் பார்த்து உள்ளுணர்வால் அறியச் செய்யும் நியாயத்துக்குச் 'சந்திரசாகா நியாயம்' என்று பெயர்,

# சந்திரசாகா நியாயம்

நல்ல பகல் மூன்று மணி நேரத்துக்கு இரண்டாம் பிறைச் சந்திரனை ஒருவன் வானில் காணுகின்றான். அதைத் தன் தோழனுக்கும் காட்டவேண்டும் என்று எண்ணுகின்றான். உடனே அவன் தோழனை அழைத்து "அதோ பார் பிறைச் சந்திரனை அழகு! அழகு !!" என்று சொல்கிறான். நண்பன் தலையை அண்ணாந்து சுற்றுகிறான். பரந்து ஒளிவீசும் வானில் அந்தச் சிறிய பிறைச் சந்திரன் கண்ணுக்குத் தட்டுப்படுவதில்லை. அந்த நிலையில் காட்ட விரும்பியவன் தன் நண்பனுக்கு ஒரு யுக்தி சொல்கிறான். "அதோ பார் ஒரு ஆலமரம். அதனுடைய அந்தக் குறிப்பிட்ட கிளையைப் பார். அதன் முடிவில் உள்ள அந்த இலையைப் பார். அந்த இலையின் நுனிக்கும் உன் பார்வைக்கும் ஏற்பட்டிருக்கும் நேர்க்கோட்டை மனதால் நீட்டு. அதன் முடிவில் சந்திரனைப் பார்க்கலாம்" என்று சொல்கிறான். நண்பன் அவ்விதம் செய்து பார்க்கிறான்.

இதில் இரண்டு விஷயங்கள் உள்ளன.

ஒன்று நண்பன் தனக்குக் கூறப்பட்ட பொருளை நன்றாகத் தெரிந்துகொண்டு அந்தப் பக்கமே பார்க்கவேண்டும்.

இரண்டாவது சந்திரன் அந்த இலையில் இல்லை. சந்திரன் அந்த இலையைக் குறித்துச் செலுத்தப்பட்ட பார்வையின் திசையிலேயே அதிகத்தொலைவில் இருக்கிறான்.

அந்த நண்பன் அந்த இலையின் பக்கம் கண் பார்வையைச் செலுத்தும் நிலையில் கண்கள் அந்தச் சந்திரனைப் பிடித்துவிட்டன. அதை அவன் அறியச் சற்று நேரமாகலாம். ஆனாலும் பக்கத்திலிருக்கிறவன் அவன் கண்களில் சந்திரனைக் கண்டுவிட முடியும். ஏனென்றால் அவன் கண்கள் சந்திரனை நோக்கி நேராய் அமைந்துவிட்டன. என்றாலும் பாவம் அவன் பார்க்க முடிகிறதில்லை. அதனைக் கண்டுகொள்ள முடியவில்லை.

அதேபோல நாம் மனதுக்கும் புத்திக்கும் தகுந்த பயிற்சியைத் தந்து விட்டால் மனது-புத்தி ஞானமயமாகி விடுகிறது. அதற்குள் இருக்கும் தத்துவத்தை அது அறிந்து விட்டது. நாம் புரிந்து கொள்ள முடியாத போனாலும் "அது" ஏற்கனவேயே நம் மனது புத்திக்குத் தட்டுப்பட்டுவிட்டது.

• அந்தப் பொருளை நம் அருகே இருப்பதாகச் சொல்கிறோம், தொலைவிலும் இருப்பதாகச் சொல்கிறோம்.

'சர்க்கார்' உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். நாம் நம்முடைய சர்க்கார் டில்லியில் இருப்பதாகச் சொல்கிறோம். அது இதோ நம் எதிரே நிற்கும் போலீஸ்காரனிடம் வெளிப்பட வில்லையா? சர்க்கார் அதிகாரி ஒவ்வொருவரிடமும் வெளிப்படு கிறதே. ஏன் அவர்கள் இல்லாத இடத்திலும் தான் அந்த சக்தி இருக்கிறது. சர்க்கார் இங்கே இல்லை என்றால் குழப்பம் நேரிட்டு விடாதா? ஆகவே சர்க்கார் எங்கும் இருப்பது என்பதும் உண்மை. அது டில்லியில் இருக்கிறது என்று சொல்வதும் உண்மை தான். அதைப்போல இந்தச் சக்தி எங்கும் இருக்கிறது. வெளிப்படுத்தும் உருவம் குணம் அமைந்த பொருள்களாகிற உயிர்களிடத்தில் அது வெளிப்படுவதைக் காண்கிறோம்.

சந்திரனைக் காட்டுவதற்கு "மரம், அதன் கிளை, இலையின் பக்கம் பார்வையைச் செலுத்தி நேரே மேலே பார்" என்று சொன்னோ மல்லவா? அது சரியில்லை என்றால் வேறு ஏதாவது அடையாளத் தையும் காட்டலாம், 'அதோ தெரிகிற வீடு, அதன் மேல் நட்டுள்ள ரேடியோக் கம்பம், அதன் நுனி, அதற்கு நேரே" என்றும் சொல்லலாம் அல்லவா? அதேபோல் கண்ணன் மற்றும் சில அடையாளங்களைச் சொல்கிறார்.

## பதினேழாவது சுலோகம்

**அவிப$^4$க்தம் ச பூ$^4$தேஷு விப$^4$க்தமிவ ச ஸ்தி$^2$தம்**
**பூ$^4$தப$^4$ர்த்ரு ச தஜ்ஜ்ஞேயம் க்$^3$ரஸிஷ்ணு ப்ரப$^4$விஷ்ணு ச**
**(13-17)**

**அவிபக்தம்ச** துண்டாகாமல் ஒன்றுனதும், **பூதேஷு விபக்த மிவசஸ்திதம்** உயிர்களில் துண்டாவது போல நிற்பதும் உண்மை யில் அது எங்கும் பரவி ஒரே பொருளாய் நிற்பது தான். ஆனாலும் 'காரியத்துக்கு ஆகும் பேச்சில்' பிரிந்து நிற்பது போலத்தான் இருக் கிறது. மனிதன் மட்டுமல்ல, நாய், பூனை முதலிய மிருகங்க ளுள்ளும் எல்லா ஜீவகோடிகளுள்ளும் அந்தத் தத்துவம் வெளிப் பட்டுத் தெரிகிறது. ஆகவே பிரிந்ததுபோல் தான் பேசப்பட வேண்டியிருக்கிறது.

இப்பொழுது நம் இந்திய தேசம் ஒன்று தான். ஆனால் நாம் நடந்துகொண்டே போகும்போது திடீர் என்று இரண்டு கால்களின் மேல் நிற்கும் ஒரு பலகையைப் பார்க்கிறோம். அதில் மதுரையின் எல்லை, ராமநாதபுரம் ஆரம்பம் என்று எழுதியிருக்கிறது. அதாவது இரண்டு ஜில்லாக்கள் அல்லது இரண்டு ராஜ்யங்களின் எல்லை இங்கிருந்து ஆரம்பித்து ஒன்று ஒரு பக்கமும் மற்றொன்று மற்றொரு பக்கமும் வியாபிப்பதாகத் தெரிவிக்கிறது. ஒரு பக்கம் இருக்கும் அதிகாரிகள் மறுபக்கம் இருக்கும் இடத்தில் தம் அதிகாரங்களைச் செலுத்த முடியாது. அப்படி இந்தத் தேசத்தைப் பிரித்தது எது? அந்தத் தேசம் பிரிந்துதான் விட்டதா? இல்லை. ஆனாலும் சௌ கரியத்துக்காகத்தேசம் பிரிக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது. தேசம் ஒன்றே தான். தேர்தல்கள் வந்தால் அகண்ட பாரதம் என்று கூட்டங்களில் நின்று உரத்த குரலில் பேசுகிறார்கள். ஆனால் ராஜ்ய நிர்வாகம் என்று வந்தால் "உன் ராஜ்யம் வேறு, என் ராஜ்யம் வேறு. அந்த ஜில்லாவின் அந்தப் பகுதியில் கை வைக்காதே" என்று சீறுகிறார்கள்.

அதைப்போலவே நன்கு தெளிந்து கொண்டால் 'அது' ஒன்று தான், சாதாரணக் காரியங்களுக்குப் பிரிந்து நிற்பதுபோல் தான் காணப்படும் என்ற உண்மையைக் காணலாம்.

**பூதபர்த்ருச** உயிர்களை எல்லாம் தாங்கி நிற்பது அதுவே .... குடத்தைத் தாங்கி நிற்பது மண் தான். குடத்தை மேஜை தாங்கு கிறது, பூமி தாங்குகிறது என்பதெல்லாம் குடம் குடமாயிருக்கும் வரையில் தான். மண் இல்லை என்றால் குடம் இல்லை. குடத்தின்

உருவம், அமைப்பு, எல்லாம் குடமாகாது. "நான் மண்ணை எடுத்துக் கொள்கிறேன், நீ குடத்தை எடுத்துக் கொள்" என்று சொல்லி யாரையும் சம்மதிக்க வைக்க முடியாது. "ஏ பெண்ணே கஷ்டம் வந்துவிட்டது, பணம் தேவைப்படுகிறது. உன் நகைகளை எல்லாம் எடு. நான் அதிலுள்ள தங்கத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். நீ நகைகளை எல்லாம் வைத்துக் கொள்ளலாம்" என்றால் அந்தப் பெண் கூடச் சிரிப்பாள். எனவே இந்த உயிர்களின் உருவம், அமைப்பு, பெயர், அளவு எல்லாவற்றையும் ஆதாரமாய், மண் எப்படிப் பானையைத் தாங்கி நிற்கிறதோ, தங்கம் எபபடி நகைகளைத் தாங்கி நிற்கிறதோ அப்படி அந்தக் கண்ணன் தத்துவம் தாங்கி நிற்கிறது.

**தத்** அது **ஞேயம்** அறியப்படவேண்டிய பொருள்.
**க்ரஸிஷ்ணு :** எல்லாவற்றையும் அடக்கிக் கொள்வதும் .... (அது)
**ப்ரபவிஷ்ணுச :** எல்லாவற்றையும் தோற்றுவிப்பதுவும் அதுவே.

சமுத்திரத்தில் அடிக்கும் அலைகளைப் பார்க்கலாம். அலைகள் எங்கிருந்து எழுகின்றன? அந்தச் சமுத்திரத்திலிருந்து தானே. மீண்டும் அதை ஏற்றுக் கொள்வது எது? விழுங்குவது எது? அதே கடல் தான். கடலை விட்டால் அலை இல்லை. தலைமுறை தலைமுறையாக எண்ணற்ற அலைகள் எழுந்து, ஓங்கி வளர்ந்து, மீண்டும் மறைகின்றனவே, அவற்றை உற்பத்தி செய்வது எது? அவை மடிவது எதற்குள்? யாவும் கடல் தான். தான் அழியாமல், அழியும் அலைகளிலிருந்தே எழுந்து, அழியும் அலைகளுக்கு உரியதாகவும் அழியும் களனாகவும் இருப்பது அதுவே தான்.

அதைப்போல, மறைந்த தலைமுறை உயிர்களிலிருந்து, கிளம்புகிறது மற்றொரு தலைமுறை. மறைந்த தலைமுறை உயிர்களும் எங்கேயும் போய்விடுவதில்லை. அதுவே பல உருவங்களில் மாறி, இருக்கும் உயிர்களுக்கு ஆகாரமாகி நிற்கின்றது. நாம் கழித்த கழிவுப் பொருள்களே புல்லாகமாறிப் பசுவின் ஆகாரமாகிறது. அதிலிருந்து

கிடைக்கும் பாலை நாம் உண்கின்றோம். அதேபோல சென்றுபோன தலைமுறையை இந்தத் தலைமுறை உண்டு வளர்கிறது. இப்படி எழுந்து மறையும் தலைமுறைகளுக்கு ஆதாரம் எது? உரியது எது? அவை மறைவது எதற்குள்? எல்லாம் ஒன்று தான். அந்த அடிப் படைப் பொருள் தான் அது. கொஞ்சம் கற்பனையின் உதவியால் நாம் ஒரு வருஷத்தை ஒரு செகண்டாக மாற்ற முடியும் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது கொஞ்சம் யோசிக்கலாம். ஒரே நிமிஷ நேரத்தில் பல உயிர்கள் எழுந்து வளர்ந்து அழிந்து மறைவதைப் பார்க்கலாம். கொஞ்ச நேரத்தில் பல தலைமுறைகள் விழுங்கப்படுவதை நாம் தெரிந்து கொள்ளலாம் மனதைக் கொஞ் சம் வேகமாக ஓட வைத்தோமானால் (ஆம்! கற்பனையின் உதவி யால் தான்) இந்த அதிசயத்தை நாம் காண முடியும். அப்பொழுது இவை எல்லாம் ஒரு சிறிய சலனம் போல் தான் தோன்றும். பல தலைமுறைகள் போய் வருவது எல்லாம் ஒரு சிறு அலைபோல் நிகழ்ந்து விடும்.

அதேபோல் நம் உள்ளேயும் எண்ண அலைகள் எழுந்து எழுந்து மடிகின்றன. அந்த அலைகளுக்கு உரியதாயும் அவைகளை விழுங்குவ தாயும் நிற்பது அந்த அழியாத் தத்துவம் தான். அந்த அலைகள் அதைவிட்டுத் தனித்திருக்க முடியாது. எழுவதும் அதிலே தான். ஆடுவதும் அதிலே தான். அழிவதும் அதற்குள் தான். ஆகவே வெளியுலகில் சராசரங்களையும், உள்ள - உலகில் உணர்வுகள், எண்ணங்கள் முதலியவைகளையும் ஏற்று நிற்பது அதுவே.

## பாடத்தின் முறைச் சிறப்பு

குரு சிஷ்யனுக்குப் பாடம் சொல்லித் தரும்பொழுது சிஷ்யன் மனதில் சந்தேகம் எழும். அச்சந்தேகத்தைக் குரு அறிந்து அதற் கேற்றவாறு அதை ஒட்டி இன்னும் பல சந்தேகங்கள் எழும்படி விஷயத்தை விளக்குவார் பிறகு எழுந்த அச்சந்தேகங்கள் எல்லாம் ஒரு வார்த்தையில் மறையும்படி எடுத்துச் சொல்லிவிடுவார். அந்தத் திறமையை நாம் கண்ணனிடத்திலும் காண்கிறோம்.

## பதினெட்டாவது சுலோகம்.

ஜ்யோதிஷாமபி தஜ்ஜ்யோதிஸ்
தமஸ: பரமுச்யதே
ஞானம் ஞேயம் ஞானக³ம்யம்
ஹ்ருதி³ ஸர்வஸ்ய விஷ்டி²தம் (13-18)

இதுவரையில் விவரத்தைக் கேட்ட அர்ஜுனன் மனதில் ஒரு சந்தேகம் எழாமல் போகாது. இப்படிப்பட்ட பேராற்றல் வாய்ந்த அகண்டமான அந்தப் பொருள் ஏன் உணர்வுக்குத் தட்டுப்படுவதில்லை? அப்படியானால் அது இருண்டு கறுத்த ஒளியில்லாத ஒரு அற்புதம் போல் இருக்கிறது என்று அவன் எண்ணியிருப்பான். அதற்குப் பதில் சொல்லும் முறையில் கண்ணன் சொல்லுகிறார்.

**ஜ்யோதிஷாமபி தஜ்யோதி:** ஒளி தரும் பொருள்களுக்கு எல்லாம் அது ஒளியாகும் .... .... இங்கே ஒளி அல்லது விளக்கு எது என்று நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அகல் விளக்கையோ, அரிக்கன் லாந்தரையோ அது குறிக்கவில்லை. சூரியன், சந்திரன். நக்ஷத்திரங்கள் எல்லாம் ஒளி தான். அவைகளுக்கெல்லாம் கூட அந்தப் பரம்பொருள் ஒளி தருகிறது.

பூஜையில் பகவானுக்குச் சூடன் கொளுத்திக் காட்டும்பொழுது பூஜை செய்பவர்கள் பின்வருமாறு சொல்லுவார்கள்: " உன் அருகில் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் கூடத்தம் ஒளி இழக்குமே!. பிறகு அக்கினி எந்த மூலைக்கு? அப்படிப்பட்ட உனக்கு நான் இந்த ஒளியைக் காட்டுகிறேன் !"

ந தத்ர ஸூர்யோ பா⁴தி ந சந்த்ர தாரகம்
நேமா வித்³யுதோ பா⁴ந்தி குதோ யம் அக்³னி

இப்படிச் சொல்லித்தான் தீபம் காட்டவேண்டுமென்று வழங்கி வந்துவிட்டது. அப்படிச் சொன்னலாவது என்ருவது ஒரு நாள் அதைப்பற்றிய உண்மையை யோசிப்பதற்கும், உண்மையை அறிவதற்கும் வசதி ஏற்பட்டிருக்கிறது.

பகலில் நல்ல சூரிய ஒளியில் நெருப்புக் குச்சியைக் கொளுத்தினால் அது எரிகிறதா இல்லையா என்று கூடத் தெரியாது. அதே நெருப்புக் குச்சியை நள்ளிருளில் கொளுத்தினோமானால் கிராமத்தில் வழிகாட்டும். அதைப்போல சூரியன், சந்திரன் முதலிய ஒளிகளும் அந்த ஒளிக்கு முன் ஒளி காட்ட முடியாமல் ஒளித்துக் கொள்ளுகின்றன.

ஒளிகளுக்கும் ஒளி தருவது எபபடி? என்று நாம் பார்க்கலாம். ஒளி என்றால் வெளியே கண் பார்க்கின்ற வெளிச்சத்தை மட்டும் சொல்லவில்லை. உள்ளேயுள்ள அறிவொளியைக் குறிக்கிறோம். விளக்கின் ஒளியில் நாம் பார்க்கின்ற ஒன்றை மனது ஏற்றுப் புரிந்து கொள்கிறது. புத்தி கருத்துக்களைப் பார்க்கிறது. அந்த அறிவு அல்லது பார்வைக்கு ஒளி தந்தது எது? அதுதான் அந்த அறிவொளி. அதை ராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமிகள் "ஆன்மா ஒளிதான்; ஆனால் ஒளிக்கு ஏற்பட்டுள்ள குணமற்ற ஜோதி" என்று என்று சொன்னார்கள். அந்த உள்ளொளி தான் நம் அனுபவங்களின் உணர்வுகளையெல்லாம் ஒளிபெறச் செய்கிறது.

**தமஸ: பரமுச்யதே:** இருளுக்கும் அப்பாற்பட்டதாகக் குறிக்கப் பெறுகிறது .... சாதாரணமாக நாம் இருட்டில் இருந்தாலொழிய, வெளிச்சத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியாது. துக்கம் தெரியாதவன் சுகத்தை அறியமாட்டான். அதைப்போல இந்த ஒளிக்கு இருள்வேண்டுமா என்றால் வேண்டியதில்லை. சூரியனிலேயே அமர்ந்திருப்பவன் இருளைப்பற்றித் தெரியாத காரணத்தினால் தான் வெளிச்சத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள மாட்டான். அந்தக் கருத்திலே இருளில்லாதது என்றால் ஒளிமயமானது என்று பொருள். அந்த ஞானக்கற்றையில் அவித்தை அல்லது அஞ்ஞான இருள் பேரளவுக்குக் கூடக் கிடையாது.

**ஞானம் ஜ்ஞேயம்:** அந்தப் பொருள் ஞானமேயாகும். ஞானத்தால் அறியப்படுவதாகும். ஞானத்தின் ஊடே அதை அடைய முடியும்.

கனவு காண்பவன் உண்மையை மறந்திருக்கிறன். அவன் உண்மையை அறிவது எப்பொழுது? அதற்கு அவன் என்ன செய்ய வேண்டும்? எந்தக் கருவியைக்கொண்டு எந்தப் போக்கில் சென்ருல் எந்த எல்லையில் அவன் உண்மையை அறிவான்? அந்த உண்மை என்ன? என்றும் விளக்கிவிடலாம். கனவில் அவன் தனக்குத் தொல்லைகள் ஏற்படுவதைப் பார்க்கிறன். தானே, அவற்றிற் குள்ளாகிவிட்டதினுல் ஏற்பட்ட வருத்தத்தை ஏற்றுக்கொண்டு வருந்துகிறன். இதனுல் எல்லாம் அவன் பாதிக்கப்படவில்லை என்பதுதான் அந்த உண்மை. அந்த உண்மையை அவன் விழித்த உடன் அறிந்து கொள்ளுகிறன். அதற்கு எங்கும் போக வேண்டிய தில்லை. ஏதும் செய்யவேண்டியதில்லை. விழித்தால் போதும். அதே போல மனிதன் உண்மையை அடைய வேண்டுமென்ருல் அந்த விழிப்புப்போதும். மனம், புத்தி கொள்ளவேண்டிய பதினெட்டு வகைப் பண்பாடுகள் சொல்லப்பட்டன, அந்த நிலையிலேயே அது ஞானம் என்று சொல்லப்பட்டது. (13-அத்.-8-12 சுலோகங்கள்) இந்த ஞானத்தினுல் இது அடையப்பட்டது. அதுதான் ஞேயம் என்பது அதுவும் (13-அத். 13-17 சுலோகம்) விவரிக்கப்பட்டிருக் கிறது.

**ஞான கம்யம்:** பயிற்சி பெற்ற மனம்-புத்தி. ஞானம், அதனுல் அறியப்படுவது ஞேயம் அந்த ஞேயத்தையும் உபநிஷத வாக்கி யங்கள் மூலம் கண்ணன் காட்டியிருக்கிருர். அப்படித் தாராள மனம் புத்தி உபநிஷத வாக்கியங்கள் தந்த கருத்தை அறிந்து மேலேறி ஞல் எங்கே சென்றடைய முடியுமோ அது ஞான கம்யமாகும். அதாவது ஆத்ம சாக்ஷாத்காரமாகும்.

**சர்வஸ்ய ஹ்ருதிவிஷ்டிதம்:** (இந்தத் தத்துவம்) எல்லோ ருடைய இதயத்துக்குள்ளும் இருக்கிறது .... இந்தத் தத்துவத்தைத் தேட எங்கும் போகவேண்டாம். இதயத்துக்குள்ளேயே அதைப் பார்க்கலாம். இதயம் என்பது சரீர விஞ்ஞானம் கூறும் இதயம் அல்ல உடலில் மார்புக்குள்ளே மூடிய கை அளவுக்கு இருக்கிற அந்த மாமிசப் பிண்டத்தைச் சொல்லவில்லை. மனதின் எந்த எல்லையிலிந்து சிறந்த மனிதப் பண்பு கொண்ட எண்ணங்கள் எழு கின்றனவோ அந்த இடத்தை இதயம என்று கூறுகிறேம். மனிதப்

பண்புகள் என்றால் மனிதத் தன்மைக்கு இன்றியமையாத தயை, கருணை, தியாகம் முதலிய நற்குணங்களாம். அவை மனதின் ஒரு பகுதியிலிருந்து தான் கிளம்பும். அந்த மனதிலிருந்தே மிருக எண்ணங்களும் கிளம்பலாம். கீழ் எண்ணங்கள் எழும் மனதில் அந்தப் பரம்பொருளைத் தேட முடியாது.

சூரிய ஒளியைப் பொருள்களின் தளம் எல்லாமே பிரதிபலிக்கும். அந்த நிலையில் நம்முடைய உருவத்தையும் அது பிரதிபலிக்கத்தான் செய்யும். ஆனால் சுவரிலே நாம் நம்முடைய பிம்பத்தைப் பார்த்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அதன்மேல் தளத்திற்குக் கண்ணாடித் தன்மை இல்லை. அதாவது தளம் நல்ல வழுவழுப்பாகவும், தெளிவாகவும் இல்லை. ஆகவே நாம் கண்ணாடியிலே நம்மைப் பார்த்துக் கொள்ளுகிறோம். முகம் பார்க்கும் கண்ணாடிக்கு ஊடுருவும் ஒளியைத் தடுத்து அப்படியே எல்லாவற்றையும் திருப்பச் செய்துவிடும் சக்தி நிரம்ப இருக்கிறது.

இந்தக் கண்ணாடி பார்ப்பதிலும் ஒரு வேடிக்கை இருக்கிறது. கண்ணாடியிலே பார்க்கும்பொழுது உள்ளே தெரிகின்ற முகத்தின் மூக்கில் கரி ஒட்டியிருப்பதாக வைத்துக் கொள்வோம். நாம் எதைத் துடைக்கிறோம்? கண்ணாடிக்குள் விரலைவிட்டு அந்தக் கரியைத் துடைக்க நாம் முயற்சி செய்வதில்லை. நம் மூக்கைத்தான் துடைத்துக் கொள்கிறோம். அந்த அறிவு தானாகவே நமக்கு வருகிறது.

அதைப்போல கண்ணாடி போன்ற இதயத்தில் நாம் பேருண்மையான அந்த ஒளித் தத்துவத்தைக் கண்டு கொள்ளலாம். கண்டு கொண்ட பிறகு எப்படிக் கண்ணாடியில் கண்ட மூக்கின் நுனியை வெளியிலுள்ள நம் மூக்கின் நுனியாக அறிந்தோமோ அதைப்போல அந்தத் தத்துவத்தை உலகெங்கிலும் நாமாகவே காணமுடியும்.

இந்தத் தத்துவத்தைக் காண கோவில், குளம் என்று போக வேண்டாம் இதயக் கோவிலுக்குள் சென்றால் அதன் ஒளியைக் காணலாம். ஆனால் வறண்டு பாலைவனமாகி ஈரமற்ற இதயமாக இருந்தால் அங்குக் காண்பது சந்தேகம் தான்.

**28—8—56 செவ்வாய்**

ஞானம் எது என்று கூறப்பட்டது. ஞேயம் விளக்கப்பட்டுவிட்டது. பிறகு ஞேயத்திஞல் விளக்கப்பட்ட அந்த உண்மையை ஞானம் சென்று அடையவேண்டும். அந்த உண்மை, அதாவது அப்பேருண்மைத் தத்துவம் எல்லோருடைய இதயத்திலும் தான் இருக்கிறது.

**பத்தொன்பதாவது சுலோகம்.**

இதி க்ஷேத்ரம் ததா[2]ஞானம்
ஞேயம் சோக்தம் ஸமாஸத:
மத்[6]ப[4]க்த ஏதத்[3]விக்ஞாய
மத்[3]பா[4]வாயோபபத்[3]யதே (19)

**இதி ;** என்றவாறு (மேலே கூறப்பட்டபடி)

**க்ஷேத்ரம்** க்ஷேத்ரம் எது என்றும் **ததா ஞானம் ஞேயம் ச** அதேபோல் ஞானமும் ஞேயமும் **ஸமாஸத:** சுருக்கமாக என்ஞல் கூறப்பட்டன. ஒருமுறை பின்ஞேக்கி முன்ஞல் சொல்லப்பட்டதை எல்லாம் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்: பதினெட்டு வகைப் பயிற்சிகள் சொல்லப்பட்டன. அவையே ஞானம் என்றும், அவை நீங்கிய மற்றதெல்லாம் அஞ்ஞானம் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே ஞானம் என்பது மஞேபுத்தியைக் கூர்மையாக்கும் பயிற்சிகளால் பக்குவமான மஞேபுத்தியாம்.

ஞேயம் என்பது அறியப்படவேண்டியது. "ராமையரை எனக்குத் தெரியும்" என்று நாம் எப்பொழுது பூர்ணமாகச் சொல்லமுடியும்? ஒருமுறை பார்த்தால் போதுமா? ஒருமுறை பேசிஞல் போதுமா? போதாது,

அவருடன் எப்பொழுதும் பழகும் வாய்ப்பைப் பெற்று அவருடைய சுக துக்கங்கள், குணகுணங்கள், நிலைகள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்ட பிறகல்லவோ 'அவரை நான் அறிவேன்' என்று பூர்ணமான கருத்தில் சொல்லமுடியும்! அதைப்போல "ஞேயம் என்றால் பேச்சளவில், பேரளவில் தெரிந்து கொள்ளக்கூடியது" என்ற பொருளில் இருந்துவிட்டால் போதாது. அதற்காகத்தான் '**ஞானகம்யம்**' என்று சொல்லப் பட்டது. அந்த ஞேயத்தை ஞானம் அடைந்து விட வேண்டும். தெரிந்து அதனுடன் ஒன்றிவிட வேண்டும். அதுதான் வாழ்க்கையில் வெற்றிகரமான முடிவு. ஞானம் என்ன என்பது தெரிந்துவிட்டு ஞேயம் என்ற ஒன்றையும் கண்ணன் கொடுத்த குறிப்புக்கள் மூலம் தெரிந்துகொண்டுவிட்டேன் என்று சொன்னால் போதாது.

**ஞானகம்யம்:** அந்த ஞேயத்தை நுண்மையடைந்த புத்தியின் மூலம் தெரிந்து அதன் வழியையும் அறிந்து அடைவது தான் முக்கியம். அந்த ஞேயம் வேறு எங்கு மில்லை. நல்ல இதயத்தில் இருக்கிறது. நல்ல இதயம் பெற்றவன்தான் அதை அறியமுடியும். நல்ல இதயம் ஏன் தேவை என்றும் பார்க்கலாம்.

மனம் கோபமடைந்திருந்தால் நம் செய்கைகளும் அதற்கேற்றவாறு படபடப்படைகின்றன. நல்ல உணர்ச்சிகள் ஏற்பட்டால் மனம் ஒரு அமைதியையும் ஆனந்தத்தையும் அடைகிறது. உடலும் அதற்கேற்ற வாறு அமரிக்கையாக இருக்கிறது. நம்மீது அன்புள்ள வர்களைப் பற்றி எண்ணினால் நாம் அறியாமலேயே இதயத்தில் ஒரு மலர்ச்சி எற்படுகிறது. முகம் இன்ப ஒளி பெறுகிறது, இதழ்கள் புன்சிரிக்கின்றன. ஆகவே

நல்ல எண்ணங்களும் அவை ஒட்டிய நல்ல உணர்ச்சி களும் தான் கண்ணன் தத்துவத்தைக் காணத் தகுதியான அமைதியைத் தரமுடியும். அதனுல்தான் இதயம் என்ருல் உயர்ந்த மனித உணர்ச்சிகள் வெளியாகும் இடம் என்று சொன்னேம்.

இந்தவிதமாக எல்லாம் விளக்கப்பட்டிருக்கின்றன. **மத்பக்த**: என் பக்தன், **ஏதத் விக்ஞாய** இதை (எல்லாம்) அறிந்து **மத்பாவாய;** என் தன்மையை அடைவதற்கு **உபபத்யதே:** தகுதியுடையவனுக ஆகிருன்.

ஏற்கனவே அடிக்கடி சொல்லியிருக்கிருேம், இது கிருஷ்ண பக்தர்களுக்காகமட்டும் கிருஷ்ணனுல் சொல்லப் பட்டதில்லே என்று. இந்த சம்வாதம் நடப்பதையே நம் உள்ளே நடக்கும் பேச்சு என்று கொள்ளவேண்டும். நான் நான் என்று சொல்வதெல்லாம் — நம் மனதின் உயர்ந்த பகுதி; அர்ஜுனன், என்பது குழப்பமடைந்து சங்கடப்படும் தாழ்ந்த பகுதி.

**மத்பாவாய** என்ருல் என்னிடம் பக்தி செய்து என் பாவத்தை அடைவதற்கு என்று பொருள். பக்தி என்ருல் அன்பு ஆகும். நாம் ஒருவரிடம் அன்பு செலுத்துகிருேம் என்ருல் நாம் அவருடன் ஒன்றுகிருேம் என்று அர்த்தம். அதாவது அவருடைய சுக துக்கங்களே நம்ம தாகக் கருதுவோம். அவரையே எண்ணியருப்போம். எல்லேயில் அவரே நாமாகிவிட்டதுபோல் நடந்து கொள் வோம். உண்மையில் நாம் அன்பு செய்யும் பாத்திரத் துடன் ஒன்றும் சக்தி எவ்வளவுக்கெவ்வளவு நம்மிடம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அன்பு வளரும்; வெற்றியடையும். எல்லேயில் அன்பு செய்கிறவரும்

அன்பு செய்யப்படும் பாத்திரமும் இரண்டறக் கலந்து விடுவதுதான் அன்பின் நல்ல முடிவாகும்.

அதைப்போல "இதை அறிந்தவர்கள் என் பாவத்"தை (தன்மையை) அடையலாம் என்கிறார் கண்ணன். உடனே அடைந்து விட்டார்கள் என்று பொருள் அல்ல. அடையத் தகுதியுள்ளவராகி விட்டார் கள் என்றுதான் கண்ணன் சொல்கிறார். 'அனுமதிச் சீட்டு' வாங்குகிறவன் ரயிலில் போகவோ, அல்லது வேறு இடத்துக்குள் நுழையவோ தகுதி பெற்றிருக்கிறான். அவ்வளவுதான். அதேபோல மனோ-புத்தி ஞானமாக்கப் படுகிறது. ஞேயமும் எது என்று அறிந்து கொள்ளப் படுகிறது. பிறகு அது ஞானவழியில் நேரடியாக உணரப் படவேண்டும் என்று தெரிந்து கொள்கிறான். அந்த நிலையில்தான் பக்தன் 'கண்ணன் நிலையை' அடையத் தகுதிபெறுகிறான்.

# பிரகிருதியும் புருஷனும்

க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞனைப் பற்றிச் சொல்லியாய் விட்டது. "ஞானமும் - ஞேயமும்" மேலே விளக்கப் பட்டன. ஞேயம் ஞானத்தின் ஊடே அடையப்பட வேண்டியது என்றும் சொல்லியாய் விட்டது. அதன் எல்லையில் 'கண்ணன் நிலையைச்' சாதகன் அடையத் தகுதிபெறுகிறான் என்றும் சொல்லியாய் விட்டது.

பின்னால் பிரகிருதி புருஷனைப்பற்றியும் சொல்லியாக வேண்டுமல்லவா? அர்ஜுனன் அதையும் கேட்டிருக் கிறானே! 'நான் சொல்லுகிறது தான் எனக்குத் தெரியும். இதைப்பற்றித் தெரிந்துகொள்' என்று குரு சொன்னால்

அவர் உயர்ந்த குருவாக முடியாது. அவரவருக்கு ஏதோ சில விஷயம் தெரிந்திருக்கலாம். அதையும் குறிப்பிட்ட வார்த்தைகள் மூலம்தான் ஒருவர் உணர்ந்திருக்கலாம். அவருக்கும் புரியும்படி சொல்லவேண்டும் என்ருல் அவர் அறிந்திருக்கும் வார்த்தைகளுக்கு உள்ள கருத்தை விளக்கி அவர் தெரிந்திருக்கிற விஷயத்தை ஒட்டித் தம் கருத்தை விளக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் புதுக்கருத்தைப் புரிந்துகொள்வார். அதை நன்கு தேர்ந்த ஆசாரியர்தான் செய்ய முடியும். கிருஷ்ணன் ஜகத்குரு அல்லவா? அவர் அர்ஜுனன் வைத்திருக்கிற "மரக்காலாலே"யே ஞானத்தை அளந்து புரியும்படி காட்டுகிருர். அவன் கற்றிருக்கும் வார்த்தைப் பைகளிலேயே ஞானத்தைக் கட்டித் தருகிருர்.

வரும் மூன்று சுலோகங்களிலும் கருத்துக்களின் ஒரு தொடர் வருகிறது. அந்தக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள ஆன்மா, மனம், புத்தி, உடல், நான் என்கிற ஜீவத்வ பாவனை இவைகளைப்பற்றி நாம் அறிந்த சில கருத்துக்களையும், அவற்றிற்குள்ள தொடர்ச்சியையும் மீண்டும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பின்னுல் சொல்வதை நன்ருய்ப் புரிந்துகொள்ள முடியும்.

மனதுதான் நம் சந்தோஷம் அல்லது வருத்தம் முதலிய உணர்ச்சிகளுக்குக் காரணம். வெளியிலுள்ள பொருள்கள் இன்பம் தருவதும், துன்பம் தருவதும் நம் மனதின் நிலையைப் பொறுத்தேதான் ஏற்படுகிறது. சாதாரண நிலையில் வெளிப்பொருள்கள் அல்லது நிலைகள் இன்பம் தருவன அல்லது துன்பம் தருவன என்றும் பிரித்துச் சொல்லலாம் என்ருலும் நன்கு யோசித்தால்

மனம்தான் அவைகளை ஏற்கும் விதத்தில் இன்ப துன்பங்களை நிர்ணயம் செய்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். சண்டைக் காலத்தில் சண்டையை வெறுத்தனர் மக்கள். ஆனால் கள்ளச் சந்தையை நடத்தியவன் வரவேற்றான். மற்றவர் வருந்தினார்கள். அவன் மட்டும் ஆனந்தம் அடைந்தான்.

கை வண்டி இழுத்துச் செல்லும் ஒரு மனிதனை ஒரு மோட்டார் டிரைவர், சைக்கிளோட்டி, மற்றொரு கை வண்டி இழுப்பவன் மூன்றுபேரும் கண்டால் அவர்கள் மனதில் ஒரே மாதிரியான உணர்ச்சி எழுவதில்லை. ஒருவன் அவனைக்கண்டு வெறுப்புக் கொள்ளலாம். மற்றொருவன் இரக்கம் கொள்கிறான். ஆகவே வெளிப் பொருள்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது நிலைகள் தரக்கூடிய பயனை இன்பம் அல்லது துன்பமாக மாற்றக் கூடியது மனம்தான்.

ஒருவன் மனம் எப்படி மாறி நிற்கிறதோ அதற்கேற்றவாறு ஒருவன் செயல்களும் ஆகி அவனும் அந்தத் தன்மையுடையவனாக மாறிவிடுவான். திருடிச் சிறை சென்ற ஒருவன் அங்கே யோசித்து "இனித் திருடக் கூடாது" என்று முடிவுசெய்கிறான். மனம் மாறிவிடுகிறது. வெளியே வந்தவுடன் அவன் நடத்தை மாறிவிடுகிறது. நல்ல மனிதனாகிறான். அதனால்தான் படிப்பு என்றால் மனதைத் திருத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்கிறோம். உடையளவில், அலங்காரப் பொருள்களின் உபயோக அளவில் மாற்றுகிறது இந்த நாள் படிப்பு. ஏன் என்றால் இந்நாள் படிப்புப் பண்பாட்டைத் தருகிறதில்லை. ஆகவே மனம் அமையும் நிலைக்கேற்றவாறு "நான்" என்ற நம் உட்பொருளும் பயனை அனுபவிக்க

நேரிட்டு அதன் தன்மைகள் அங்கங்கே மாறி நிற்கும் தோற்றத்தையடைகிறது.

ஒரு உதாரணம் எடுத்துக் கொள்ளலாம். மூன்று வாளிகளில் சுத்தமான தெளிந்த நீரை எடுத்து நிரப்பி வாசல் திண்ணையில் வைத்துவிடுகிறோம். முதல் வாளி நீர் தெளிவாக அசையாமல் இருக்கிறது. இரண்டாவது வாளி நீரை கலக்கி விடுகிறோம். மூன்றுவது வாளி நீரில் கொஞ்சம் சாணியைக் கரைத்துக் கலக்கியும் விடுகிறோம். மூன்றிலும் சூரியனின் பிரதிபிம்பத்தைப் பார்க்கலாம். ஆனல் அம்மூன்று பிரதிபிம்பங்களிலும், கவனித்தால் வேற்றுமையையும் பார்க்கலாம். முதல் வாளியில் தோன்றும் பிரதிபிம்பம் சிதையாமல் கிட்டத்தட்ட சூரியனின் ஒளியையே கொண்டதாயிருக்கும். இரண்டாவதில் ஒளி அப்படியே இருக்கும். ஆனல் பிம்பம் உடைந்து சிதறி ஆடிக்கொண்டு இருக்கும். மூன்றும் வாளியில் பிம்பமோ மங்கியும் ஆடிக்கொண்டும் இருக்கும்.

நம் உள்ளே நான் என்கிற அந்தப் பொருளைத்தான் "ஜீவத்வபாவனை" என்கிறோம். அது அந்த அடிப்படைத் தத்துவத்தின் சாயலேதான். அந்தச் சாயல் பிரகிருதியின் மூலம் பிரதிபலிக்கிறது. பிரகிருதியின் தன்மைக்கேற்ற வாறு அந்தச் சாயல் குணத்தை ஏற்றுக்கொள்கிறது.

வாளி உதாரணத்தில் வாளியும் நீரும் பிரகிருதி. சூரியனின் பிரதிபிம்பம் ஜீவத்வபாவனை அல்லது புருஷன். ஆகவே எல்லாருள்ளும் இருக்கிற அந்த அடிப்படைப் பரமாத்மப் பொருள் பிரகிருதி இருந்தால்தான் பிரதிபலித்து புருஷனுக முடியும். அந்தப் புருஷத் தன்மை, பிரதிபலிக்க உதவிய பிரகிருதியின் தன்மை நிலைக்கேற்ற வாறுதான் அமையும்.

அந்த அடிப்படைப் பரமாத்ம தத்துவத்தை வைத்துக் கொண்டு பார்த்தோமானுல் இந்தப் புருஷன் பிரகிருதி இரண்டுமே க்ஷேத்ரம் தான்.

**க்ஷேத்திரம்** இருந்தால் அதை அறிகிறவன் **க்ஷேத்ரக்ஞன்** என்று சொல்லப்படுகிறது. **பிரகிருதியில்** பிரதிபலிக்கப்பட்டால் **புருஷன்** என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்தத் தத்துவமேதான் பிரதிபலிப்பாலோ க்ஷேத்திரத்தை ஒட்டியோ புருஷன் அல்லது க்ஷேத்ரக்ஞனுகிறது. ஆனுல் புருஷன் தன்மையை பிரகிருதி நிர்ணயிக்கிறது. அடிப்படைச் சக்தி பாதிக்கப் படுவதில்லை.

அது எப்படி என்ருல் - அடிப்படை மின்சக்தி ஒரு குணமும் கொண்டதல்ல. அது வெளிச்சமாக மாறி விட்டால் அந்த வெளிச்சம் அது எரிகிற கம்பியின் தன்மைக்கேற்றவாறு சக்தியையும், ஊடுருவுகின்ற கண்ணுடிக்கேற்றவாறு நிறத்தையும் அடைகிறது. அதைப்போல் அடிப்படைத் தத்துவம் பிரகிருதியில் சாயலாக மாறுகிறபோது புருஷனுகிறது. பிறகு பிரகிருதிக் கேற்றவாறு குணங்களைக் கொள்கிறது.

## இருபதாவது சுலோகம்.

ப்ரக்ருதிம் புருஷம் சைவ
வித்[3]த்[4]யநாதீ[3] உபா[4]வபி
விகாராம்ஸ்ச கு[3]ணும்ஸ்சைவ
வித்[3]தி[4] ப்ரக்ருதிஸம்ப[4]வான் (20)

**பிரகிருதிம் புருஷம் சைவ வித்தி**: பிரகிருதியையும் புருஷனையும் அறிந்துகொள். **உபாவபி**: இரண்டுமே

அநாதிதான். புத்தி என்று முதன்முதலில் ஏற்பட்ட பொழுதே பிரகிருதியும் புருஷனும் இருக்கிறதென்றால் அதை அநாதி என்று சொல்வதற்குத் தடை இல்லை. எப்படி அநாதி என்று கேட்கிற கேள்வியே அசட்டுத் தனமாகிவிடும். கோர்ட்டில் சில கேள்விகள் கேட்கக் கூடாது. மனைவியைப் புருஷன் எப்பொழுதும் அடிக்கிற தாக வழக்கு வருகிறது என்று வைத்துக்கொள்வோம். புருஷன் அடிக்கவே இல்லை என்று சாதிக்கிறான். மனைவி அடிக்கத்தான் செய்ததாகச் சாதிக்கிறாள். அந்தச் சமயத்தில் கணவனிடம், 'நீ மனைவியை அடிப்பதை நிறுத்தி விட்டாயா?' என்று கேட்டால் பதில் என்ன கிடைக்கும்? 'ஆம்' என்றாலும் மாட்டிக்கொள்வான், 'இல்லை' என்றாலோ இதற்குமுன் அடித்ததாக ஆகிவிடும். அங்கே அந்தக் கேள்வி ஏமாற்றுகிறது என்பதற்காகக் கேட்க அனுமதிக்கப்படுவதில்லை.

அதேபோல இங்கே பிரகிருதி புருஷன் எப்பொழுது ஆரம்பித்தது? என்ற கேள்வி அடிப்படையையே ஆட்டு கிறது. இந்தக் கேள்வி என்று முதன் முதல் எழுந்ததோ அன்றே பிரகிருதியும் புருஷனும் இருந்திருக்கின்றன.

**விகாரம்ஸ்ச குணாம்ஸ்சைவ வித்தி பிரகிருதி ஸம்பவான்:** மாறுதல்களையும் குணங்களையும் பிரகிருதியி லிருந்து கிளம்பியவைகளாகவே அறிந்துகொள். ஒருவன் பொல்லாதவனாக இருக்கிறான். மற்றொருவன் நல்லவனாக இருக்கிறான். ஒருவன் உள்ளம் இரக்கம் கொண்டதாக இருக்கின்றது. ஒருவன் இதயத்தில் ஈரத் தன்மையே அற்று அரக்கத் தன்மையே குடிகொண்டிருக் கிறது. ஒருவன் சர் ஸி. வி. ராமன், ராதாகிருஷ்ணன் போன்று புத்திசாலியாக இருக்கிறான். மற்றவன் நம்மைப்

போல சாதாரணமாக இருக்கிறன். எல்லாம் அந்தப் பிரகிருதியின் தன்மையே தவிர புருஷனின் அசல் தன்மையல்ல.

## இருபத்தோராவது சுலோகம்.

கார்யகாரணகர்த்ருத்வே
ஹேது. ப்ரக்ருதிருச்யதே
புருஷ: ஸுக[2] து[3]:கா[2]ஞம்
போ[4]க்த்ருத்வே ஹேதுருச்யதே (21)

மேலும் **பிரகிருதி**: பிரகிருதி **கார்ய காரண கர்த்ருத்வே:** காரியம் கரணம்,கர்த்ருத்வம் மூன்றுக்கும் **ஹேது** ஆதாரம் என்று சொல்லப்படுகிறது. கரணம் என்பது பொறிகளாம். ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள் தவிர மனம் புத்தியையும் அஹங்காரம் என்ற மூன்றையும் சேர்த்து மொத்தம் பதின்மூன்று கரணங்கள் ஆகின்றன. பிரகிருதிதான் கரணங்களுக்கும், செயல்களுக்கும், செயல்கள் செய்வதற்கும் ஹேதுவாகிறது. **ஸுகதுக்காஞம் போக்த்ருத்வே**: சுக துக்கங்களை அனுபவிக்க **புருஷ**: புருஷன் **ஹேதுருச்யதே** ஆதாரம் என்று சொல்லப்படுகிறது.

புருஷன்தான் நன்மை தீமைகளை அனுபவிப்பதற்குக் காரணம். அதுதான் சுக துக்கத்தை அனுபவிக்கிறது. மனம் புத்தி முதலிய பிரகிருதியின் தன்மைக்கேற்றவாறு "புருஷன்" தன்மை பெறுகிறது. ஆகவே சுக துக்கங்களை அந்தந்த வகையில் அதுதான், தன் தன்மைக்கேற்றவாறு அனுபவிக்கிறது.

## இருபத்திரண்டாவது சுலோகம்.

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ$^2$ ஹி
புங்க்தே ப்ரக்ருதிஜான்கு$^3$ணன்
காரணம் கு$^3$ணஸங்கோ$^3$஽ஸ்ய
ஸத$^3$ஸத்$^3$யோநிஜன்மஸு (22)

**புருஷ: பிரகிருதிஸ்தோஹி:** புருஷன் பிரகிருதியில் இருப்பவன். வாளியில் சூரியன் பிரதிபிம்பம் இருக்கிறது. வாளி இல்லை என்றால் அதில் நீர் இல்லை; நீர் இல்லை என்றால் பிரதிபிம்பம் இல்லை. ஆனால் சூரியன் எப்பொழுதும் உண்டு. அதேபோலப் பிரகிருதி இல்லை என்றால் புருஷன் இல்லை. ஆகவே புருஷன் பிரகிருதியிலுள்ளவனே என்று அழுத்தமாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்துகொண்டு **ப்ரகிருதிஜான் குணன்:** பிரகிருதியில் உண்டான குணத்தை **புங்க்தே:** அனுபவிக்கிறது. புருஷன் பிரகிருதிக்குள் சேர்ந்த, மனதில் எழும் ஆசையுடன் ஒன்றுகிறது. அதைத் தனதாக ஏற்றுக்கொள்கிறது. ஒருவன் மனதில் பல ஆசைகள் எழுகின்றன. புருஷன் அவற்றுள் ஒன்றை எடுத்து அதனுடன் தன்னை ஐக்கியமாக்கிக் கொள்கிறான். பிறகு அதனால் ஏற்படும் சுக துக்கங்களை ஏற்றேயாக வேண்டும். உதாரணமாக ஆபீஸிலிருந்து வந்த ஒருவன் மனதில் பல ஆவல்கள் எழுகின்றன. அவற்றுள் ஒன்று 'நண்பன் ராமு வீட்டுக்குப் போகலாம்' என்பது. அவன் உடனே கிளம்புகிறான். வழியில் மழை, சைக்கிளில் மோதல், தார் சேறு லாரி இரைத்தது........எவ்வளவோ துன்பங்களை ஏற்றுக்கொள்கிறான். கடைசியில் ராமு வீட்டிலும் ஏமாற்றம் காத்திருக்கலாம். இவ்வளவும் ஏன்? அந்த ஒரு ஆசையுடன்

ஒன்றி அதை வளர்த்ததனுல்தானே. கிளம்பியவுடன் அந்த ஆசையை ஒதுக்கியிருந்தால் இந்தத் தொந்தரவு வருமா? அதேபோலப் புருஷனும் பிரகிருதியுடன் ஒட்டு வதால் அதன் குணத்தை அனுபவிக்கிறது. அந்தக் கருத்தைத் தொடர்வோம்.

எந்த ஆசையுடன் மனிதன் ஒட்டுகிருனே அதை நிறைவேற்ற முயலுகிருன். அதற்கேற்றவாறு அவன் நடையுடை பாவனைகள் மாறுகின்றன.

ஆபீஸிலிருந்து வந்தவன் சினிமாவுக்குப் போக வேண்டும் என்ருல் அதற்கேற்றவாறு உடையை மாற்றிக் கொண்டு அதற்குத் தக்க வாகனத்தில் போகிருன். கோவிலுக்குப் போகவேண்டும் என்ருல் ஆசாரமாக உடையணிந்து நடந்தே போகிருன். டீ பார்ட்டிக்குப் போகவேண்டும் என்ருல் அதற்குத் தக்கவாறு உடை அணிகிருன், போகிருன்.

அதேபோலப் புருஷன் பிரகிருதியுடன் ஒட்டுகிறது புருஷன் பிரகிருதியின் ஆசைக்கேற்றவாறு ஆடவேண்டி யாகிவிடுகிறது. அதனுல்தான் **குணசங்க:** இந்த ஒட்டி நின்றதால் ஏற்பட்ட குணச்சேர்க்கை **ஸத் அஸத் யோநி ஜன்மஸு:** நல்ல அல்லது கெட்ட பிறப்பில் ஜன்மம் எடுப்பதற்குக் **காரணம்:** காரணம் ஆகிறது.

ஒரு ஜன்மத்தில் ஒருவன் "நாம் நன்ருய் சௌகரிய மாய் இருக்கவேண்டும். வேலையே செய்யாமல் உண்டு மதோன் மத்தமாய்த் திரியவேண்டும். சுக போகங்களை அனுபவிக்கவேண்டும். குழந்தைகளாகப் பெற வேண்டும்!" என்று ஆசைப்பட்டால் அவனுக்கு அடுத்த ஜன்மத்தில் பன்றி ஜன்மம் நிச்சயம். அப்படியே தான்

ஜன்மங்கள் நிகழ்கின்றன. மனிதன் ஆசையை அனுபவிக்க எங்கே போகிறுனே அந்த இடத்திற்கும் அந்த வேலைக்கும் ஏற்றவாறு உடையை மாற்றிக்கொள்கிறுன். அதேபோலப் புருஷனும்தான் ஒன்றிய ஆசையை அனுபவிக்க ஏற்ற இடம், நிலை இவற்றிற்குத் தக்கவாறு ஜன்மம் எடுக்கிறுன்.

ஆசை நம்மை ஆட்கொள்ளாதவாறு நம் மனதைப் பழக்கிப் பிரகிருதியைச் சுத்தம் செய்யவேண்டும். அதற்கு வழி இருக்கிறது. வாசனைகளை வாழ்ந்து ஒழித்து மேலும் வாசனைகள் ஏற்காதிருக்க வேண்டும். அப்பொழுதுதான் பிரகிருதி சுத்தமாகும். பிரகிருதி சுத்தமானுல் புருஷன் சுத்தமாவான். வாளி நீர் தெளிவாயிருந்தால் பிம்பம் தெளிவாவதுபோல் அந்தநிலையில் பிரகிருதியை அகற்றிப் புருஷன் பரமாத்மாவுடன் சேர்ந்து முக்தியடைய முடியும். இதுவே புனர்ஜன்ம வாதத்திற்குத் தக்க ஆதாரம். இதை ஒத்துக்கொள்ளாமல் பேசுவதெல்லாம் அறிவு மேலே யோசிக்க முடியாததனுல்தான். "ஒரு முறை இறந்தவனுடைய ஆத்மா 'தீர்ப்பு நாள்' வரை அப்படியே இருக்கவேண்டும். அந்த நாள் வந்தவுடன் கடவுள் எல்லா ஆத்மாக்களையும் அழைத்து இரண்டு வரிசைகளில் நிறுத்திவைப்பார். அதனதன் செய்கைகளுக்கேற்றவாறு தண்டனையோ பரிசோ அளிப்பார்," நல்லவர்களுக்கு என்றும் சுவர்க்கம், கெட்டவர்களுக்கு என்றும் நரகம் என்றெல்லாம் சொல்கிறுர்கள். அது துணிவுள்ள புத்தி ஒத்துக்கொள்ளும்படியில்லை.

ஆசைகளின் தன்மைக்கேற்றவாறு ஜன்மம் எடுத்து அவற்றை அனுபவிக்கிறுன் மனிதன். அந்த ஜன்மத்தில் ஆசை நீங்கியவுடன் மேல் பிறவி கிடைக்கிறது. மனிதப்

பிறவியில் கெட்டிக்காரத்தனமாக இன்னும் ஆசைகளைச் சேர்த்துக் கொள்ளாமல் ஏற்கனவே இருந்த வாசனைகளையும் கழித்தால் பிறகு ஜன்மம் இல்லை. முக்தி தான். கீதைச் சொற்பொழிவுகள் என்ற இதே புத்தகத்தில் முதல் பகுதி பக்கம் 20, 21, 22 'திரும்பிய சாக்கடை' என்ற பகுதியில் பார்க்கவும்.

எனவே இந்தச் சுலோகத்தில் புனர் ஜன்ம வாதத்துக்கும் விளக்கம் தரப்படுகிறது.

பிரகிருதியினால் உருத்தரப்பட்ட அந்தப் பரம் பொருள் அல்லது பரமாத்மாவின் சாயலே 'புருஷன்' என்று சொன்னோம். அந்தப் புருஷன்தான் நான் என்கிற 'ஜீவத்வ பாவனையாம்'. அதுதான் மனதின் இச்சைக்கேற்றவாறு அதைப் பூர்த்தி செய்வதற்காகத் தகுந்த ஜன்மங்களை ஏற்றுக்கொள்ளுகிறது. பிரகிருதியின் குணத்திற்கேற்றவாறு அது மாறித் தோற்றமளிக்கிறது. அந்தநிலையில் மனிதனுக்கு மனிதன் மாறுபட்டு இருப்பது உண்மைதான். ஆனால் அதற்குப் பின்னால் இருக்கும் பரம்பொருள் ஒன்றேதான்; அகண்டாகாரமானதுதான். 'பல்பை' உடைத்துவிட்டால் 'லைட்'டும் அணைந்துவிடும். உருத்தெரியாத மின்சாரம் மட்டுமே மிஞ்சும். அதைப் போல இந்தப் பிரகிருதியைத் தீர்த்துவிட்டால் புருஷனும் போய்ப் பிறகு நிற்பது ஞானமயமான அந்தப் பொருளே யாம். இதைச் சொன்ன பிறகு பிரகிருதியின் காரணமாய் ஏற்பட்டு அதிலேயே நிற்கும் புருஷன் பிரகிருதி தந்த குணங்களை எல்லாம் அனுபவிக்கும் பொழுது அந்தப் பரம்பொருள் என்ன செய்கிறது? என்ற கேள்விக்குக் கண்ணன் பதில் சொல்லத் தொடங்குகிறார். அதைப் புரிந்துகொள்வதற்குப் பின்வரும் விஷயத்தைத் தெரிந்து கொள்வது நல்லது.

உலகிலுள்ள ஜீவன்களை எல்லாம் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் முன்னேற முயற்சி செய்கின்றவர்கள். மற்றொரு வகையினர் முன்னேற முயற்சி செய்யாமல் கீழ் நோக்கியே செல்லுகின்றவர்கள். முன்னேறுதல் என்றால் ஆன்மீகத் துறையிலே அந்தப் பரம்பொருளுடன் யோகமடையும் முயற்சியைக் குறிக்கிறோம். முயற்சி செய்யும் வகையிலும் இரண்டு உள் வகைகள் உண்டு. யோகம் முற்றிய நிலையில் உள்ளவர்கள் ஒரு வகையினர். அவர்களை **யோகயுக்தா:** என்று சொல்லுகிறோம். மற்ற வகையினர் முயற்சியை விடாமல் செய்து கொண்டிருக்கிறவர்கள். கீழ்நோக்கிச் செல்பவர்களையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் முன்னேறும் முயற்சியே இல்லாமல் கீழ்நோக்கிப் போய்க்கொண்டேயிருப்பார்கள். மனச்சாட்சியை எப்பொழுதும் அலட்சியம் செய்வார்கள். இரண்டாவது வகையினர் சில சமயங்களிலாவது மனச்சாட்சிக்கு மதிப்புக்கொடுத்துத் திருந்த முயலுவார்கள். இந்த நான்கு வகையினரையும் தெரிந்துகொண்டால் அவர்களுடைய செய்கைக்குத் தக்கவாறு பரம்பொருள் எப்படி நடந்துகொள்கிறார் என்று தெரிந்துகொள்ளலாம். இவை கீழே தரப்படுகின்றன.

## இருபத்தி மூன்றாவது சுலோகம்

உபத்³ரஷ்டானுமந்தா ச
பர்⁴தா போ⁴க்தா மஹேஸ்வர:
பரமாத்மேதி சாப்யுக்தோ
தே³ஹேऽஸ்மின்புருஷ: பர: (13-23)

**அஸ்மின்தேஹே:** இந்த தேகத்தில் **புருஷம் பர:** புருஷனுக்கு அப்பாற்பட்ட அந்தப் பரம்பொருள்,

**பரமாத்மேதி சாப்யுக்தோ :** பரமாத்மா என்னும் சொல்லப் படுகிற **மஹேஸ்வர :** அந்த மஹேஸ்வரன் **உபத்ரஷ்டா :** பார்த்துக்கொண்டிருப்பவன். **அனுமந்தா** மௌனமாக அனுமதி தருபவன். **பர்த்தா** செய்கைகளை வெற்றியால் நிரப்புபவன். **போக்தா** பலன்களை அனுபவிப்பவன்.

ஏற்கனவே சொன்ன நான்கு வகையினர்களின் செய்கைகளுக்கேற்றவாறு மஹேஸ்வரனுன அந்தப் பரம் பொருள் இந்தச் சுலோகத்தில் சொன்ன நான்கு விதமான போக்கை மேற்கொள்ளுகிருர்.

மனிதனுக்கு அவன் செய்கின்ற வேலை, அவனுக் குள்ள ஆற்றல், அவன் போக்கு இவைகளின் காரண மாகப் பெயர்கள் ஏற்படுகின்றன. அந்த வகையில் ஒருவனை எம். ஏ., என்றும், தந்தையென்றும், மகன், கணவன் என்றும், ஜில்லா ஜட்ஜ் அல்லது கலெக்டர் என்றும், பொல்லாதவன், கோபக்காரன் என்றும் பெயர் சூட்டலாம். அதேபோலப் பரம புருஷன், பரமாத்மா என்பன நிலையாலும் மஹேஸ்வர என்பது ஆற்றலாலும் கண்ணன் தத்துவத்துக்கு நாம் தந்த பெயர்கள். **உபத் ரஷ்டா, அனுமந்தா, பர்த்தா, போக்தா** என்ற நான்கு பெயர்களும் புருஷனின் செயலைக் கண்டு 'அவன்' மேற் கொள்ளுகிற போக்கைக் குறிக்கின்றன.

**உபத்ரஷ்டா :** பார்க்கிறவன்..........மிகவும் கீழ்த்தரமா யுள்ள பிரகிருதியின் செய்கைகளை அவன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிருன். மனச் சாட்சியையே மதிக்காமல் மேலும் மேலும் நாசமடைய ஏதுவான செயல்களையே செய்துகொண்டு மேலும் மேலும் பந்தத் திற்குள்ளாகின்றவன் மிகவும் கீழ்த்தரமான வகையைச் சேர்ந்தவன். உலகிற்குத் துன்பம் தருவதில் பெரு

மகிழ்ச்சி கொண்டு அதன் காரணமாக அடாத செயல் களைச் செய்து தானும் பலன் அனுபவிக்காமல் சாகின்ற வனை என்னவென்று சொல்வது? அப்படிப்பட்டவனு டைய செயல்களில் அந்தப் பரம்பொருள் ஒருவிதமான அக்கரையும் கொள்ளுவதில்லை. சாக்ஷியாக நிற்கிறான் வாதிப் பிரதிவாதிகளுக்கு வேறாய் சம்பவத்தைக் கவனித்துக் கொண்டு சம்பவத்தில் ஈடுபடாமல் இருப் பவன் சாக்ஷி.

**அனுமந்தா :** அதற்கடுத்த மேற்படியில் உள்ள ஒரு வகையினர் சில சமயங்களிலாவது தங்கள் குற்றங்களை உணருகிறார்கள். திருந்த வேண்டுமென்று முயற்சி செய் கிறார்கள். அவர்களுடைய செயல்களைக் கண்ணன் அனுமதிக்கிறார். அதாவது முற்றிலும் அவைகளுள் ஈடுபடாமல் அவர்கள் தங்களை முன்னேற்றிக்கொள்ள அனுமதிக்கிறார். இந்த இரண்டு வகையினரும் கீழ்த் தட்டில் உள்ளவர்கள். மேல் தட்டிலும் இரண்டு வகை யினர் உண்டு. அவர்களில் இரண்டாம் தரமானவர்கள் கீழ்த்தரமான செயல்கள் செய்யக்கூடாது என்று தெரிந்து, ஆனாலும் அந்த யோகயுக்த நிலையையும் அடை யாமல் தீவிர முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள். அவர்களிடத்தில் கண்ணன் மேலும் சிறிது அனுக்கிரகம் காட்டுகிறார். அவர்களுடைய செயல்களுக்கு ஆக்கம் தருகிறார்; ஊக்கமும், வலிவும் தருகிறார். செயல்களுக்கு வெற்றியையும் தருகிறார்.

அடுத்த மேற்படியில் உள்ளவர்கள் யோகயுக்தர்கள். அவர்கள் அந்த மேல் நிலையை அடைந்தவர்கள். கண்ணன் கையிலுள்ள புல்லாங்குழலைப் போலத் தம்மை 'அவனி'டம் ஒப்படைத்தவர்கள். இனி அவர்களுக்குத்

தமக்கென்று ஒன்றும் கிடையாது. சாதாரண மூங்கில் தன்னுள் இருக்கும் அசடுகளை எல்லாம் களைந்து எறிந்து ஏழு துவாரங்களையும் ஏற்றுக்கொண்டபிறகு, தன்னையே கண்ணனிடம் ஒப்படைத்துக் கொண்டது. அந்த நிலையில் அந்தக் குழலைக் கண்ணன் ஏற்றுக்கொண்டார். இனி அது எழுப்புவது எல்லாம் அவர் நாதமே. இப்படித் தன்னையே ஒப்படைத்துத் தனித் தன்மையை இழந்து அவருடன் ஒன்றியதால் அவரும் அந்தக் குழலைக் கீழே வைப்பதில்லை. அதைப்போல இந்த யோக யுக்தர்களும் தம்மை அழித்தவர்கள். தாம் என்ற தனி எண்ணம் இல்லாமல் பரம்பொருளுடன் ஐக்கியமானவர்கள். அந்த நிலைமையில் அவர்கள் செய்வதெல்லாம் 'அவன்' செயலே. அப்படிப் பரமாத்ம நிலையை அடைந்த யோக யுக்தர்கள் செய்கைகளின் பலனை அவன் அனுபவிக்கிறவன்போலக் காணப்படுகிறுன்.

அவனுடைய ஒரு பார்வையே பிரகிருதியைச் சுழலச் செய்கிறது. அதற்கு உதாரணமாக ஒரு கிரஹஸ்தன் வீட்டில் நடப்பதைச் சொல்லலாம். ராமன் என்பவன் வீட்டில் அவனுடைய பழைய நண்பனுன கோபாலன் வருவதாக வைத்துக் கொள்வோம். ராமன் அவனைக் கண்ட ஆனந்தத்தில் தன்னையும் மறந்து பழைய கதைகளைப் பேச ஆரம்பிக்கிறுன். அரை மணி ஆகியும் அவன் பேச்சை நிறுத்துகிறுன் இல்லை. அந்தச் சமயத்தில் ராமன் மனைவி வந்து எட்டிப் பார்க்கிறுள். ராமன் அவளை ஒருமுறை பார்க்கிறுன். அவளிடம் ஒன்றும் சொல்லாமல் அவன் தன்பாட்டில் கோபாலனிடம் பேசிக்கொண்டே போகிறுன். ஆனல் அவன் மனைவியோ உள்ளே சென்று வெந்நீர் வைத்துவிட்டு வந்து அழைக்கிறுள். கோபா

லனுக்கு வேண்டிய சௌகரியத்தை எல்லாம் ஒன்று ஒன்ருகமுறையாக ஏற்பாடு செய்கிருள். ஸ்நானம், சாப்பாடு, களைப்பாற ஏற்பாடு எல்லாவற்றையும் நிறைந்த மனதுடன் சந்தோஷமாகச் செய்து தருகிருள். ஏனென்ருல் கணவனின் ஒரு பார்வைக்கெதிரே அவள் ஒரு உணர்ச்சிபெற்றுச் செயல்பட ஆரம்பிக்கிருள். செய்ய வேண்டியதை எல்லாம் செய்து தருகிருள். ஆகவே பரம புருஷனின் ஒரு இன்பப் பார்வை கிடைத்தாலே பிரகிருதி சுழன்று உழைக்க ஆரம்பித்து விடும்.

## இருபத்தி நான்காவது சுலோகம்

ய ஏவம் வேத்தி புருஷம்
ப்ரக்ருதிம் ச கு³ணை: ஸஹ
ஸர்வதா² வர்தமானோऽபி
ந ஸ பூ⁴யோऽபி⁴ஜாயதே (13-24)

**யஹ:** எவன் **யேவம்:** இவ்விதம் **புருஷம்:** புருஷனையும் **குணை: சஹ:** குணங்களுடன் **ப்ரகிருதிம்ச:** பிரகிருதியையும் **வேத்தி:** அறிகிருனே **சஹ:** அவன் **சர்வதாவர்த்த மானேபி:** எந்த நிலையிலிருந்தாலும் **பூயோ:** மறுபடியும் **ந அபி: ஜாயதே:** பிறக்கிறதில்லை.

‘அறிகிறது’ என்பதற்கு பேச்சளவிலே புத்தியின் திறமையைக் கொண்டு அறிகிறது என்ற கருத்தல்ல. நெருப்பைத் தொட்டுப் பார்த்துச் சூட்டை உணர்ந்தவன் எப்படிச் சூட்டைத் தெரிந்து கொண்டிருப்பானே அப்படியே புருஷனையும் பிரகிருதியையும் தெரிந்துகொண் டிருக்கவேண்டும். அப்படியிருப்பவன் மீண்டும் இந்தப் பழைய நிலையை அடைவதில்லை. நாம் அந்த ஆத்மாவே தான் என்று உணர்ந்துவிட வேண்டும். இப்பொழுதோ

நாம் உடல்தான், அதில் ஆத்மாவும் இருக்கிறது என்ற வகையில் பேசிவருகிறோம். இந்தப்பேச்சு மாறி உணர்வு ஏற்பட்டு நாம் ஆத்மாவே; அதுதான் உண்மை. இந்த உடல்தான் அதில் வந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது என்ற அனுபவம் வரவேண்டும். அப்படி வந்துவிட்டால் எந்த நிலையிலிருந்தாலும் பழைய வாசனைகள் அவற்றின் பலன்கள் எல்லாம் வந்து ஒட்டமுடியாது. எப்படிப் போல என்றால், செய்கை செய்தவன்தான் பலனை அனுபவிப்பான். கொன்றவனைத்தான் தண்டிப்பார்கள். அதிகம் தின்றவனுக்குத்தான் வயிற்றுவலி வரும். மற்றவனுக்கு வராது. பிரகிருதி குற்றம் செய்தாலும் அதன் பலனை ஆத்மா ஏற்கவேண்டியதில்லை. ஆகவே நாம் ஆன்மமயமாக மாறிவிட்டோமானால் வாசனைகள் வந்து அண்ட முடியாது. பாட்டனார் கடன் வாங்கி இறந்துவிட்டால் பேரனைக்கேட்டு லாபமில்லை. போனில் தப்பான நம்பரை கூப்பிட்டு ஒருவன் மற்றொருவன் யாரையோ குறித்துத் திட்டுவதாக வைத்துக்கொள்வோம். அந்தத் திட்டு எல்லாம் அவனை ஒன்றும் செய்யாதல்லவா? அதைப் போல எந்த நிலையில் வாழ்ந்திருந்தாலும் சரி அவன் ஆன்மமயமாக மாறிவிட்டானானால் பழைய வாசனைகள் அவனை அண்ட முடியாது. பாபம், புண்ணியம் ஒன்றும் அவனைக் கட்டுப்படுத்தாது.

யக்ஞ சாலையில் வேதாந்தக் கருத்துக்களைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஒருவன் என்ன நிலையில் இருக்கிறான்? தன்னை அறியாமலே கருத்துக்களின் வெளிச்சத்தைக்கொண்டு அதன் வழியாக ஒரு உச்ச நிலையில் ஏறி நிற்கிறான். ஆனால் அடுத்த நிமிஷம் யக்ஞ சாலையை விட்டுப் போகும்பொழுது புது ஆளாக

மாறியிருந்த அவன் மீண்டும் பழைய ஆளாக மாறி விடுகிறுன். ஆன்ம மயமாக மாறியவன் மீண்டும் அந்த நிலையை அடைவதில்லை. அதைத்தான் கண்ணன் அவன் மீண்டும் பிறப்பதில்லை என்று சொல்கிருர்.

## இருபத்தி ஐந்தாவது சுலோகம்

த்[4]யானேனுத்மனி பஸ்யந்தி
கேசிதா[3]த்மானமாத்மனு
அன்யே ஸாங்க்[2]யேன யோகே[3]ன
கர்மயோகே[3]ன சாபரே (13-25)

கனவு காண்பவன் கனவிலே கொலைசெய்துவிடுகிருன் என்று வைத்துக்கொள்வோம். அவன் நல்ல மனமுள்ள வன். தவறி நடந்துவிட்டது என்று பயந்து மேலே கிடைக்கவிருக்கும் தண்டனைகளை எண்ணி அலறுகிருன். அந்தச் சங்கட நிலையிலிருந்து அவன் எப்படித் தப்புவது? அவன் விழித்துக்கொள்ள வேண்டும். அதாவது 'கனவு காண்பவன் தான் நான்' என்கின்ற நிலையை ஒழித்துத் தனியே வந்து விட்டாஞல் அவன் விழித்தவனுக ஆகிருன். விழித்தவனை கனவுச் சங்கடங்கள் பாதிக்கப் போவதில்லை. அதேபோல ஜீவன் பிரகிருதியுடன் சேர்ந்து குழம்புகின்ற நிலையை நீக்கிப் பரம் பொருளுடன் ஒன்றிவிட்டாஞல் முக்தி அடைந்துவிடுவான். இந்த நிலையை எப்படி அடைவது? அதாவது நாம் நம்மைக் கண்டு கொள்வது அல்லது நம்மை உயர்ந்த ஞான நிலைக்குக் கொண்டுபோவது எப்படி? அதற்கான வழி களைக் கண்ணன் இந்தச் சுலோகத்தில் விளக்குகிருர்.

**கேசித்:** சிலர் **ஆத்மானம்:** தன்னை (உண்மைப் பொருளை) **ஆத்மனு:** தன் முயற்சியாலேயே (சுத்த மனதினுலே)

**ஆத்மனி:** தன்னுள்ளேயே (சுத்த புத்தியில்) **த்யானேன:** தியானத்திஞல் **பஸ்யந்தி:** பார்க்கிருர்கள்..............கண்ணு டிக்குள் நம் சாயலைப் பார்க்கிறேம். நாமே அது என்று தெரிந்து கொள்ளுகிறேம். அதைப்போல மனே-புத்தி தெளிவாக்கப்பட்டால் அதனுள்ளேயே அந்த உண்மை யைக் கண்டு கொள்ளலாம். அதைத்தான் தியானம் என்பது. மனமும் புத்தியும் தெளிவடையப் பதினெட்டு வகைப் பயிற்சிகள் முன்பே சொல்லப்பட்டன.

**அன்யே:** மற்றவர்கள் **சாங்க்யயோகேன:** சாங்க்ய யோகத்தின் மூலமாக...........சாங்க்யம் என்பது விசாரணை யின் வழியைக் குறிக்கும். தொடர்ந்து விசாரணை செய்து ஒரு முடிவான சித்தாந்தத்தை அடைந்தோம் என்ருல் விசாரணை எந்த வழி சென்றதோ அந்தத் தர்க்க முறைக்கு அந்த உண்மைக்குச் 'சாங்க்யம்' அதாவது அந்த உண்மையை அடையச் செய்த முயற்சியின் கருத்துப் பாதை என்று பெயர்! சாங்க்யயோகம் என்பது பகுத்து அறியும் புத்தியை மீண்டும் மீண்டும் உபயோகிப்பதாகும். இது ஏன் நிகழ்ந்தது? இதன் பயனை யார் அனுபவிக்க வேண்டும்? அந்தக் கடவுள் யார் என்றெல்லாம் மீண்டும் மீண்டும் யோசிக்கவேண்டும். எதனுடன் ஒட்டக்கூடாது? செய்கைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பன போன்ற இது சம்பந்தமான பல கேள்விகளைப் பற்றி எண்ண வேண்டும். சாஸ்திரங்களைப் படித்து நிலைமைகளை ஆராய வேண்டும். உற்று நோக்கவேண்டும். அலசிப் பார்க்க வேண்டும். இப்படிப் பகுத்தறிவு தரும் அடக்க வாழ்வை மேற்கொள்ளுதலே சாங்க்ய யோகமாகும்.

**அபரே:** மற்றவர்கள் **கர்மயோகேன ச:** கர்ம யோகத் லும்திஞ........சிலருக்குக் குறிப்பாக நேரில் பார்க்கக்கூடிய

ஒரு பொருளைத் தராவிட்டால் அவர்களால் மனதை நிறுத்தித் தியானம் செய்யவோ, விசாரணை செய்யவோ இயலாமல் இருக்கும். இங்கிருப்பவன் லண்டனிலுள்ள இன்னார் என்று தெரியாத ஒரு அன்னகுமாரியைக் காதலிக்க முடியாது. அந்தச் சமயத்தில் நேரடியாகப் புரியக்கூடிய ஒரு பொருள் இருப்பது நலம். அப்படிப் பட்டவர்களுக்கு மக்கள்தான் தெய்வம். தேசபக்திதான் மதம், என்று சொன்னால் புரியும். அந்த வகையில் அவர்கள் தன்னை மறந்து நற்செயலில் ஈடுபட்டு அந்தப் பெருநிலையை அடையலாம். ஆனால் 'தான், தனது' என்கின்ற எண்ணத்தை மறக்கவேண்டும். ஒரு டாக்டர் தன் மனைவிக்கு ஆப்பரேஷன் செய்யமுடியாது. அவர் தன் கீழுள்ள டாக்டரை சுத்த மண்டு என்று கருதியிருக்கலாம். ஆனால் இப்பொழுது அவரை விட்டாவது ஆப்பரேஷன் செய்யச் சொல்வாரே தவிர தான் செய்யமாட்டார். ஏனென்றால் தனது மனைவி என்கின்ற எண்ணம் ஆப்பரேஷன் திறமையைக் குறைத்துவிடும். ஒரு வீடு நெருப்புப் பற்றி எரியும்பொழுது மற்றவர்கள் உள்ளே போகப் பயப்படலாம். ஆனால் தன் உயிராகக் கருதிய நகைப் பெட்டியை நெருப்புக்குள் புகுந்து ஒரு பெண்கூட எடுத்துக்கொண்டு வந்து விடுவாள். அங்கே அவளுடைய மனம் தன் உடலைத் தாண்டி அந்தப் பெட்டியிலே லயித்திருக்கிறது. ஐ. என். ஏ. (நேதாஜி சுபாஸ் போஸின்) வீரர்கள் டில்லி செங்கோட்டை செல்லவேண்டும் என்கின்ற லக்ஷியத்தில் தங்களை மறந்தார்கள். புல்லைமட்டுமே தின்று பிரமாத யுத்தம் புரிந்தார்கள். இந்த உதாரணங்களிலெல்லாம் தன்னை மறந்த நற்பணியில் ஈடுபாடு வெளியாகிறது. அந்த மங்காத உள் தூண்டுதல் நிலையில் மனிதன் வாழ முடியுமானால் அவனும் அந்தப் பொருளை அடையலாம்.

இதைக் கர்மயோகம் என்று சொல்லுகிறோம். கர்ம யோகத்தின் தலைசிறந்த நிலையில் 'நான்' என்கிற ஜீவத்வ பாவனை மனது புத்தி இரண்டையும் விட்டுத் தாண்ட வேண்டும். கருவுக்குள்ளே இருக்கின்ற குழந்தை வெறும் ஒரு மாமிசப் பிண்டமாக இருக்கிறது. அதற்குள் ஒரு உயிர்த்துடிப்பு இருக்கலாம். ஆனாலும் அது கட்டுப்பட்டிருக் கிறது. தாய் சாப்பிடும் ஆகாரத்தை அது ஏற்றுக்கொண்டே யாகவேண்டும். அது வேண்டாம் என்றோ இது வேண்டாம் என்றோ சொல்லமுடியாது. கருப்பையைவிட்டு வெளியே வந்த பிறகுதான் அந்த உயிர்ப்புத் தத்துவம் குழந்தை என்ற பெயரைத் தாங்கி அதன் கைகால்களை அசைத்து செயல்பட முடிகிறது. முட்டைக்குள் இருக்கின்ற கோழிக்குஞ்சின் நிலையும் அதுவே. அதைப்போலவே மனது புத்திக்குள் கட்டுப்பட்டு நிற்கின்ற 'நானும்' மனது புத்தியின் அதிகா ரத்திற்குட்பட்டு அவைகளுக்குக் கட்டுப்பட்டு சுதந்திரமின்றி வளர்ச்சியடைய முடியாமல் தவிக்கிறது. அவைகள் தருகின்ற ஆகாரத்தை அதாவது ஆசைகளின் பலன்களை மட்டுமே தின்று இருக்க வேண்டியிருக்கிறது. அதைவிட்டு சுதந்திரம் அடைந்தால் 'நான்' என்ற அந்த ஜீவன் பரமாத்மாவாக மாறுகின்ற அந்தச் சுதந்திர வழியில் செல்ல முடியும். நெப் போலியன் ஆகட்டும், விவேகானந்தர் ஆகட்டும் கருவுக்குள் பிண்டமாய் இருந்தபொழுது என்ன செய்திருக்கமுடியும்?

ஜீவத்வ பாவனை அல்லது 'நான்' மனதையும் புத்தியை யும் விட்டு வெளியேற வேண்டும். இந்த இரண்டு ஓட்டை யும் உடைத்துக்கொண்டால் ஜீவனாகிற கோழிக்குஞ்சு வெளி யேறி பரமாத்ம உலகில் கொக்கரிக்க முடியும். மேலே

சொன்ன மூன்று வழிகளும் அவரவர்கள் புத்தியின் சூக்ஷ்ம ஸ்தூல நிலைக்கு ஏற்றவாறு அவறவர்கள் ஏற்றுக்கொள்ள லாம். சில மாணவர்களுக்கு கணக்கு வேம்பாக இருக்கலாம். ஆனால் சிலருக்கு அதுவே கரும்பாக இருக்கும். அதைப் போல புத்தியினுடைய கூர்மைக்கேற்றவாறு தியான யோகத் தையோ, சாங்க்ய யோகத்தையோ ஏற்றுக் கொள்ளலாம். அது இல்லை என்றால் கர்ம யோகமும் நல்ல வழியே. இந்த மூன்றும் முறையே உத்தமோத்தம அதிகாரிக்கும், உத்தம அதிகாரிக்கும் மத்யம அதிகாரிக்கும் ஆகும். இந்த மூன்றுமே கஷ்டம் என்றால் என்ன செய்வது? கண்ணன் அந்த அதம அதிகாரிக்கும் ஒரு வழி சொல்கிறார்.

## இருபத்தாறுவது சுலோகம்

அன்யே த்வேவமஜாநந்த:
ஸ்ருத்வான்யேப்[4]ய உபாஸதே
தே2பி சாதிதரந்த்யேவ
ம்ருத்யும் ஸ்ருதிபராயணா: [26]

**அன்யேது:** மற்றவர்களோ **ஏவம் அஜானந்த:** இதை யெல்லாம் தெரியாதவர்களாக **அன்யேப்ய:** (தத்துவம் அறிந்த) மற்றவர்களிடமிருந்து **ஸ்ருத்வா:** கேட்டு **உபா சதே:** உபாசிக்கிறார்கள். **ச:** மேலும் **ஸ்ருதி பராயணா:** கேட்டதை நம்பி நடக்கின்றவர்களான **தேபி:** அவர்களும் **ம்ருத்யும்:** அழிவுத் தன்மையை **அதிதரந்தி யேவ:** தாண் டவே தாண்டுகிறார்கள். (இதில் சந்தேகமில்லை.) ... நல்லது கெட்டது என்று புரிந்து கொண்டு செயல்களைப் பொறுக்கி எடுத்து அவைகளில் ஈடுபடுவதற்கும் ஒருமுறை உண்டு.

அந்த முறைப்படி ஈடுபடுகிறவர்கள்தான் நன்மையை அடைய முடியும். அந்த முறையும் கஷ்டமானதாக இருக்கலாம். ஓயாத தொழிலும் அதன் மிகச் சிறந்த தன்மையும் இருக்க வேண்டும். அதுவும் முடியாதவர்களுக்கு இந்த வழி சொல்லப்படுகிறது.

ஒரு குருவை அடைந்தால் அவர் நமக்கு நம்முடைய நிலைக்கேற்றவாறு ஒரு உபாசனை வழியைச் சொல்லிக் கொடுப்பார். அதிலே மாறாமல் நின்றோமானால் நாமும் நற்கதியை அடையலாம். இதில் சிரத்தையிருந்தால் போதும். புத்திக்கூர்மை அவ்வளவு தேவையல்ல. ஆகவே கர்ம யோகம் புத்திசாலிகளுக்கும் அடுத்த வழி சிரத்தைசாலி களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

நம் நாட்டிலேயே சென்னை ராஜ்ய வாசிகளை புத்திசாலி களுக்கு உதாரணமாகக் கொள்ளலாம். வடநாட்டவரை சிரத் தைசாலிகளாகக் கொள்ளலாம். அவர்கள் காவித் துணியைக் கண்டவுடன் மறுபேச்சின்றி சிரத்தை காட்டத் தொடங்கி விடுவார்கள். ஆனால் சென்னை ராஜ்யத்திலோ லகுவில் நம்ப மாட்டார்கள். ஆனால் இவர்கள் அலசிப்பார்த்து உண்மை அறிந்து கொண்டார்களானால் குருட்டு நம்பிக்கைக்காரர்களை விட அதிகமாகச் சிரத்தை காட்டுவார்கள். குருட்டு நம்பிக்கை கொண்டு சிரத்தை காட்டுகிற சிஷ்யர்கள் அதிக மானால் மோசக்கார குருமார்களும் அதிகமாவார்கள் என்பது உண்மைதான். இருபத்தைந்து ரூபாயைக் கொடு, உலகி லுள்ள நன்மைகள் எல்லாம் உனக்குத் தருகிறேன் என்றெல் லாம் சொல்லுவார்கள். ஆகவே நல்ல குருவை தேடிக் கொள்வது அவசியம்.

பிறகு எல்லாம் சுலபம். அவர் சொல்வதைக் கேட்டு அதன்படி சிரத்தையுடன் நடந்தால் போதும். மற்ற எந்த விசாரமும் தேவையில்லை. மதுரையில் இருக்கும் ஒருவனுக்கு விஷயமறிந்த ஒருவன் திருச்சினுப்பள்ளி போகும் சாலையைக் காட்டி இதன் வழியே போ என்றால் அவன் நேராகப் போகலாம். கவலை வேண்டாம். திருச்சி எப்படியிருக்கும், எங்கேயிருக்கும் என்றெல்லாம் எண்ணம் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

நல்ல குரு உண்மையுடன் காட்டிய வழியைப் பின் பற்றினால் சாவைத் தாண்டலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாவைத் தாண்டலாம் என்றால் ரஷ்யர்களைப்போல நாமும் எண்ணக்கூடாது. சாஸ்வதமாக இந்த உடலிலேயே, இந்த உலகிலேயே இப்பொழுது இருக்கும் பதவியிலேயே அதிகாரம் செலுத்திக் கொண்டு (யமனை ஏமாற்றிவிட்டு) இருந்து விடலாம் என்பது கருத்தல்ல. மாறி மாறி ஆசைகளை ஏற்று வாசனை படிய வேதனை வரும் மனதையும் புத்தியையும் மாறுதல்களை ஏற்றுக் கொள்வதிலிருந்து நிறுத்தலாம். நல்ல வழியில் செல்லலாம் என்பதுதான் இதன் உண்மைக் கருத்து.

இந்தத் தத்துவ நிலையை ஒருவாறு உணர்ந்து கொண்டோம். மேலே பேசியதிலிருந்து இது மனித உயிருக்குள் மட்டும்தான் இருக்கிறதா என்கின்ற ஒரு மங்கலான சந்தேகம் எழலாம். அதனால் பகவான் சொல்லுகிறார்.

## இருபத்தேழாவது சுலோகம்

யாவத்ஸஞ்ஜாயதே கிஞ்சித்
ஸத்த்வம் ஸ்தா²வரஜங்க³மம்
க்ஷேத்ரக்ஷேத்ராக்ஞஸம்யோகா³த்
தத்³வித்³தி⁴ ப⁴ரதர்ஷப⁴ [27]

**பரதர்ஷப:** பரத சிரேஷ்டனை ஏ அர்ஜுனனே **யாவத் கின்சித்:** எதாயிருந்தாலும் சரி **ஸ்தாவர ஜங்கமம்:** அசையும் அல்லது அசையாத **சத்வம்:** பொருள் **சஞ்ஜாயதே:** பிறக்கிறதோ **தத்:** அதை **க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ சம்யோகாத்:** க்ஷேத்ரம் க்ஷேத்ரஞன் இந்த இரண்டின் சேர்க்கையால் தான் (உற்பத்தியாகிறது) என்று **வித்தி:** அறி......பலவிதப் பானைகளில் இருக்கும் மண் உண்மை. எழுந்துமடியும் அலைகளில் சமுத்திரம் உண்மை. அதைப் போல எந்தப் பொருளாய் இருந்தாலும் ஊடுருவி நிற்கிறது அந்த உண்மை. 'என் மதத்தினருக்கு மட்டும்தான் நான் உண்மைப் பொருள்' என்று ஹிந்து மதத்தில் பகவான் சொல்லுவதில்லை. அதற்கென்று தனியான அனுமதிச் சீட்டு பெற்றவர்கள்தான் என்னிடம் வரமுடியும் என்று ஹிந்து மதத்தில் பேசப்படுவதில்லை. 'இருக்கிறது' என்ற வகையில் சொல்லக்கூடிய எந்தப் பொருளுக்குள்ளும் அந்த உண்மை இருக்கின்றது.

ஆனால் நாம் கேட்கலாம். நாம் நல்ல விஷயங்களைப் பேசுகிறோம். சத்சங்கம் சேருகிறோம். மிருகங்கள் செய்யவில்லையே! அந்த மிருகங்களுக்குள்ள குணம் கூட அந்தக் கல்லிடம் இல்லையே, பிறகு எப்படி எங்கும் ஒரே தத்துவம் என்று சொல்லலாம்? இதைத்தான் மனமாற்றம் செய்ய

விரும்பும் பிறநாட்டுப் பாதிரிகள் நம்முடைய ஒன்றுமறியாத மக்களிடம் கேட்கிறார்கள். மலபாரில் ஒருவர் இப்படித்தான் கேட்டார். கோவிலில் கல்தானே இருக்கிறது. அந்தக் கல்லைத் துதிப்பதால் என்ன லாபம்? இதோ தெருவில் கிடக்கும் கல்லைத் துதிக்கலாமே என்று எல்லாம் கேட்டார். அப்பொழுது ஒரு ஹிந்துப் பையன் எழுந்து கேட்டான். ஓ பாதிரி! உன் தாயும் பெண்தானே............! என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான். இதெல்லாம் பொல்லாத் தனம். ஆடுகளை இழுக்கும் ஓநாய் போல நம் மக்களை விழுங்குவதற்காகச் செய்யும் தந்திரம். கல்லிலும் அந்தத் தத்துவம் இருப்பது உண்மைதான். ஆனால் உணர்ச்சி களையும், கருத்துக்களையும் வெளியிடுவதற்காக வேண்டிய கருவி அதனிடம் இல்லை. அதே கருவி மனிதனிடம் மிகச் சிறந்தமுறையில் அமைந்திருக்கிறது. மிகச் சிறந்த கருவி யானாலும், வேதாந்தியானாலும் தூங்கும்பொழுது கல் தானே! அந்தச் சமயத்தில் அவனது உணர்ச்சி கருத்து முதலியவைகளை ஏற்படுத்தி வெளியிடும் கருவிகளெல்லாம் செயலற்றுக் கிடக்கின்றன. மிருகங்களிடத்தில் அது அவ்வளவு செம்மைப்பட்டதாயில்லை. ஆகவே அவைகளின் உணர்ச்சிகள் குறுகிய அளவில் இருக்கின்றன.

இந்த சுலோகத்தில் கண்ணன் "பாரத குலத்தின் ஏறே" என்று அர்ஜுனனை அழைக்கிறார். ஏ எருதே, ஏ மாடே என்று கருத்தல்ல. ஏறு என்பது தாங்கும் வலியுள்ளது என்ற கருத்தில் உபயோகப்பட்டது. உலகத்தை எருது தாங்கினதாகக் கொண்டார்கள் நம் முன்னோர்கள். உள்ளபடி விவசாய நாட்டில் அந்த நாட்டைத் தாங்குவது எருதுதானே!

ஆகவே பாதகுலப் பெருமையைத் தாங்கி நிற்கின்றவனே என்று கருத்து.

'கல்லுள்ளும் இருக்கிறான்' என்ற கருத்தைத்தான் பிரகலாத சரித்திரம் எடுத்துக் கூறுகிறது.

### இருபத்தெட்டாவது சுலோகம்

ஸமம் ஸர்வேஷு பூ[4]தேஷு
திஷ்ட[2]ந்தம் பரமேஸ்வரம்
விநஸ்யத்ஸ்வவிநஸ்யந்தம்
ய: பஸ்யதி ஸ பஸ்யதி (28)

ஆகவே அந்த பரமேஸ்வரன் எல்லாவற்றிலும் இருக்கிறார். **யஹ** எவன் **வினஸ்யத்ஸு** நாசமடைகின்ற **சர்வேஷு பூதேஷு** சராசரமான எல்லா உயிர்களுள்ளும் **ஸமம் திஷ்டந்தம்** சமமாக நிற்கின்ற **பரமேஸ்வரம்** பரமேஸ்வரனை **பஸ்யதி** பார்க்கிறானோ **ஸ பஸ்யதி** அவனே பார்க்கிறான்......எல்லா உயிர்களுள்ளும் இருக்கிற அந்த உண்மையை எவன் பார்க்கிறானோ அவனே பார்க்கிறான். இந்த நம்முடைய கருத்து ஆன்மீகத் துறையில் பொதுவுடைமையாகும். பாபிகளுள்ளும் பாவம் செய்ய உதவி செய்யும் அடிப்படை ஆற்றல் அதுதான். அதே தான் நல்லவர்களின் நற்செய்கைக்கும் ஆதாரம். இறந்துவிட்டால் அஞ்ஞானியான நாஸ்திகனும் ஒன்றுதான், ஞானியான மஹாத்மாவும் ஒன்றுதான்.

அழியும் பொருளுக்குள் அழியாமல் நிற்பது எது என்பது ஆராய்ந்து நேரே காண்பவன்தான் பார்க்கிறான். ஒரு கருத்தைப் பேச்சளவிலே புரிய வைத்துவிடலாம். மக்களின் பொதுவான சமூக ஆட்சித் தத்துவத்தை வகுப்பு

அறையில் பேசும்பொழுது மிக அழகாக உதாரணங்கள் காட்டி அன்றும் இன்றும் மனித வர்க்கத்தை இயக்குவது ஒரு ஆவல்தான் என்று நிரூபிக்கலாம். ஆனால் அந்த உண்மையை நேரே உணர சக்தி உள்ளவன்தான் உணர முடியும். ஒரு ராமய்யரே தன்னை மறந்து ராமய்யரைத் தேடினால் அவருக்கு எப்படிக் காட்டமுடியும்? பத்து மனிதர்கள் ஒருமுறை யாத்திரை சென்றார்கள். ஒரு ஆற்றைத்தாண்டி வெளியே வந்தவுடன் பத்துப் பேரும் வந்து விட்டோமா என்று எண்ணத் தொடங்கினார்கள். ஒவ்வொருவரும் தன்னை விட்டுவிட்டு எண்ணி எண்ணி ஒன்பதுபேர்தான் இருப்பதாக முடிவுசெய்து அழ ஆரம்பித்தனர். அந்தச் சமயத்தில் ஒருவன் வந்து உண்மையை எடுத்துச் சொன்னான். தன்னையும் சேர்த்துக்கொள் என்று சொன்னபிறகு ஒவ்வொருவனும் தன்னை அறிந்து சேர்த்துக் கொண்டான். அதைப்போல அழியும் பொருளுக்குள் அழியாமல் நிற்கிற அந்தத் தத்துவத்தை உணர்கின்றவன் தான் உண்மையை உணருகின்றான்.

அதைத் தெரிந்து கொண்டவன் தன்னை அழித்துக் கொள்ளாமல் பரகதியை அடைகிறான் என்று அடுத்த சுலோகத்தில் விவரிக்கப்படுகிறது.

இருபத்தேழாவது சுலோகத்தில் எல்லா பூதங்களுக்கும் சமமாக நிற்கும் அந்தத் தத்துவத்தை, அழியும் பொருளுக்குள் அழியாமல் நின்று அந்த விந்தையைப் பார்க்கிறவனே பார்க்கிறான் என்று பார்த்தோம். அந்தத் தத்துவத்தை ராம தத்துவம் என அறியலாம். ராமனை நமக்கு வால்மீகர் தான் தந்தார். அதற்கு முன் ராமர் பெயர் தெரியாது.

எல்லோருடைய உள்ளங்களிலேயும் ரமிப்பவன் ராமன். ராமன் என்ற பெயருக்கு உள்ள அர்த்தம் அதுதான். தசரதன் பத்து இந்திரியங்களை ஜயித்தவன். அதனைப் பெற்று அறிகிறதுதான் அந்தத் தத்துவம். உபநிஷதம் வேதம் இவைகளை நன்கறிந்தவர் வால்மீகி. அதனால்தான் அவர் இந்த உண்மையை உருவகப்படுத்தித்தர முடிந்தது. ராமர் உயிருடன் இருந்திருந்தாலும் சரி, இல்லை என்றாலும் சரி, அந்தத் தத்துவம், 'ராம உண்மை' இன்றும் இருக்கிறது.

வண்ணானிடம் அழுக்குத் துணியைத் தருகிறவன் ஐயோ என்று அழுகிறதில்லை. அதைப்போல அழியும் உடலை மாற்றும் அழியாத பொருள் ஒன்று உண்டு என்று உணர்கிறவன் அதை எங்கும் உள்ளதாக உணர்ந்துகொள்ள முடியும். "கிளப்பு"க்குச் செல்கிறவன் சற்று நேரம் டென்னிஸ் மட்டை எடுத்து ஆடுகிறான்; பிறகு பிங் பாங் மட்டையுடன் காட்சி அளிக்கிறான். பிறகு பிலியார்ட்ஸ் என்ற ஆட்டம் ஆட நீண்ட குச்சியை எடுத்துக்கொண்டு பந்தைக் குத்துகிறான். களைத்தவுடன் வீட்டுக்கு வருகிறான். அதேபோல், 'புருஷனும்' ஆசைக்கேற்றவாறு உருவத்தையும் கரணங்களையும் ஏற்றுக்கொள்கிறான். ஆசை முடிந்தவுடன் வேஷம் எடுப்பதை நிறுத்தி அமரத் தன்மையை அடைகிறான்.

இந்த உண்மையை அறிவதென்றால் எப்படி? எந்த முறையில்? ஒருவர் உணர்ச்சிகளை நாம் நம் உணர்ச்சிகளின் உதவிகொண்டு அறிகிறோம். காதலில் தோற்றவன் ஒருவனைப் பார்த்தவுடன், அவன் உள்ளம் படும்பாட்டை அறிந்துகொள்ள வேண்டும் என்றால் அவன் உணர்ச்சிகள் போன்ற உணர்ச்சிகள் நமக்கும் இருந்திருக்கவேண்டும். அப்பொழுது

தான் அவன் படும் அவஸ்தை நமக்கும் புரியும். அந்த அவஸ்தை உணர்ச்சித் தளத்தில் இருந்து புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று. அதேபோல ஒரு கருத்து, கருத்துத் தளத்திலிருந்து புத்தியின் உதவியால் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று. பிறருக்கு உள்ள உணர்ச்சியையோ அவருக்குப் புரியும் கருத்துக்களையோ நாம் நமக்குள்ள அதே தளத்திலிருந்தே தான் உணர முடியும். கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மட்டும் தொட்டுப் பார்த்தோ கண்ணால் பார்த்தோ அறிந்துகொள்ள முடிவதில்லை. அறிய வேண்டிய உணர்ச்சிகளுக்கும் கருத்துக்கும் ஏற்றவாறு உணர்ச்சிகளும் கருத்தும் நம் உள்ளத்திலும் புத்தியிலும் எழவில்லை என்றால் நாம் உணர்ந்துகொள்ளவே முடியாது. அதைப்போல நம் உள்ளே இருக்கிற அந்த அழியாத் தத்துவத்தை உணர்ந்து கொண்டவன்தான் பிற உயிர் உள்ளும் இருக்கிற அந்த உண்மையை உணர்ந்துகொள்ள முடியும்.

அப்படி அறிந்தால் பலன் என்ன?

## இருபத்தொன்பதாவது சுலோகம்

ஸமம் பஸ்யந்ஹி ஸர்வத்ர
ஸமவஸ்தி[2]தமீஸ்வரம்
ந ஹிநஸ்த்யாத்மநாத்மானம்
ததோ யாதி பராம் க[2]திம் (29)

**சர்வத்ர** எங்கும் **ஸமவஸ்திதம்** சமமாக உறைகின்ற **ஈசுவரம்** ஈசுவரனை **ஸமம்** சமமாக **பச்யன்** பார்க்கிறவன் **ஆத்மனா** தன்னாலேயே **ஆத்மானம்** தன்னை **ந ஹி நத்ஸி** அழித்துக் கொள்ளுகிறதில்லை. **பராம்கதிம்** பரமகதியை **யாதி** அடைகிறான்.

நமக்குள் அளியாப் பொருளாய் இருக்கும் அந்தத் தத்துவத்தை உணர்ந்தவன் அதுவே எங்கும் இருக்கிறது

என்று உணர்கிறான். அப்படி உணர்ந்தவன் தன்னைத் தானே அழித்துக்கொள்வதில்லை. ஆறாவது அத்தியாயத்தில் 'தன்னைத்தானே' உயர்த்திக் கொள்ளுகிற வித்தை விவரிக்கப்பட்டிருக்கிறது. தூக்குவது என்றால் தூக்கப்படுவது ஒன்றும், தூக்குவது ஒன்றும் இருக்கவேண்டும். அதைப் போல மனிதன் மனதில் இரண்டுபெகுதி இருக்கிறது. ஒன்று கீழ்த்தளத்தில் இருக்கிறது. அது மட்டமான போக்கைக் கொண்டது. மிருகத் தன்மை கொண்டது. மேல் தளம் ஒன்று உண்டு. அதுவே நுண்மை பொருந்திய பகுத்துப் பார்க்கும் சக்திகொண்ட புத்தியாகும். முன்னது மனம். புத்திக்கும் மனத்திற்கும் இடையே பிளவு இருத்தல்கூடாது. பிளவு இருந்தால் மனிதன் இரட்டைப்போக்கு, முரண்பட்ட போக்கு உள்ளவன் ஆகின்றான். துரியோதனன் அதற்கு ஏற்ற உதாரணம். அவன் சொன்னான். * "**ஜானாமி தர்மம்:** தர்மத்தை அறிகின்றேன். **நசமே ப்ரவ்ருத்தி:** ஆனால் அதை நடத்தமுடியவில்லை. **ஜானாமி அதர்மம்:** அதர்மத்தை அறிகின்றேன். **நசமே நிவ்ருத்தி:** என்னால் விடுபட முடியாது." அவனும் ஒரு உள் மனத்தைப்பற்றிப் பேசுகிறான். உள் மனம் அதாவது நுண் புத்தி ஒன்றைச் சொல்லுகிறது. அது பல அனுபவங்களை ஏற்று பலாபலன்களை உணர்ந்து செம்மைப்பட்டு நிற்கிறது. ஆனால் அது சொல்லுவதை மனது கேட்கிறதில்லை. இது ஒரு மிருகத்தின் நிலையாகும். பகுத்தறியும் புத்தியின் பேச்சைக் கேட்காத மனம் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறது.

---

* ஜானாமி தர்மம் நசமே ப்ரவிருத்தி
ஜானாம் யதர்மம் நசமே நிவிருத்தி
கேனாபி தேவனே ஹ்ருதி ஸதிதேன
யதா நியுக்தோஸ்மி ததா கரோமி.

தேரில் குதிரையின் கடிவாளங்கள் அறுந்துவிட்டால் பிறகு நாசம் தவிர வேறு நல்ல முடிவை எதிர்பார்க்க முடியாது. மோட்டாரில் சக்கரங்களை அடக்கித் திருப்பும் விசைக்கும், சக்கரங்களுக்கும் உள்ள இணைப்பு முறிந்துவிட்டால் பிறகு மோட்டார் சென்று மோதி அடித்து விழுந்துவிடும். அதுபோல் தான் வாழ்க்கையும். வாழ்க்கையில் இதைத் தவிர இன்னும் ஒரு மோசமும் இருக்கிறது. மோட்டாராவது மோதி அடித்து விழுந்து அங்கேயே கிடந்துவிடும். ஆனல் வாழ்க்கையில் நிற்கின்ற ஒன்றில்லை. ஆரம்ப முதல் ஓடிக்கொண்டிருக்கும் ஒன்று கட்டுத்தரித்த வாழ்வு நின்றாலும் பரவாயில்லை. நிற்காமல் ஓடினல் அதன் விளைவை நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது.

இப்படி ஓடும் மனதை புத்தியின் பிடிப்புக்குத் தந்து கீழ்நிலையில் இருந்து மேல் நிலையை அடைகிறவர்கள் மஹாத்மாக்கள். அவர்களை உலகம் காலடியில் விழுந்து வணங்குகிறது. மஹாராஜ் என்று அழைக்கிறது. புத்தர் போன்ற அருளாளர் 2500 வருஷங்களுக்கு இப்பால் இன்றும் வணங்கப்படுவதற்கு அதுதான் காரணம். அவர்கள் சமன் வயப்படுத்தப்பட்ட மனே புத்தி உள்ளவர்கள். பூர்ணத்வத்தின் உச்சியை அடைந்தார்கள்.

### முப்பதாவது சுலோகம்

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி
க்ரியமாணனி ஸர்வஸ:
ய: பஸ்யதி ததா$^2$த்மாநமகர்தாரம் ஸ பஸ்யதி (30)

27-வது சுலோகத்தில் உள்ள கருத்து மீண்டும் விவரிக்கப்படுகிறது. **யஹ** : எவன் **கர்மானி** : எல்லாச் செயல்களையும் **ஸர்வச** : எல்லாவிதத்தாலும் **ப்ரகிருத்யைவ** : பிரகிருதி

யாலேயே **கிரியமாணானி** : செய்யப்படுகின்றனவாகவும் **ததா:** மேலும் **ஆத்மானம் அகர்த்தாரம்** : ஆத்மா கர்த்தா இல்லை என்றும் **பஸ்யதி** : பார்க்கிறானோ **ஸபஸ்யதி** : அவனே (உண்மை) அறிகிறான். என்ஜின் ஓடுகிறது என்றால் ஸ்டீம் அல்லது நீராவி ஓடுகிறதில்லை. நீராவி இருப்பது உண்மை தான். அது இருந்தாலே எஞ்ஜினின் பாகங்கள் செயல்படு கின்றன. எஞ்ஜின் ஓடுகிறது. முன்னால் சொல்லப்பட்ட கிருஹஸ்தனுடைய உதாரணத்தில் வேலை செய்ததெல்லாம் கிருஹஸ்தனின் மனைவியே. கிருஹஸ்தன் ஒன்றும் செய்ய வில்லை. அவன் ஒரு பார்வையாலேயே மனைவி ஆனந்தமாக செயல்பட்டுவிட்டாள். அவன் இருந்தான் என்பது உண்மை. அவனுடைய பார்வை தான் மனைவியை இயக்கிற்று என்பது உண்மை. அவனே செய்ததாகவும் கூட நாராயணன் சொல்ல லாம். ஆனால் உண்மையில் செய்கைகள் எல்லாம் மனைவியி னுடையதுதான். அதைப்போல ஆத்மா வேலை செய்வதில்லை. இயங்கிச் செயல் புரிவதெல்லாம் பிரகிருதியே. இந்தக் கருத் தைத்தான் கோபியர் நடனத்தில் கண்ணன் படத்தில் சித்த ரிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணன் நடுவே நின்று குழலூதுகிறான். கோபியர்கள் தாமாகவே ஈடுபட்டு வருகிறார்கள். அவனைச் சுற்றித் தன்னை மறந்து ஆடுகிறார்கள். ஒவ்வொருத்தியும் அவனை அடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவனைச் சுற்றி வட்ட மாகச் சுழலுகிறார்கள். அந்த ஈடுபாட்டின் காரணமாக ஒவ் வொருத்தியின் கைக்குள்ளும் கண்ணன் சிக்குகிறான். தனக் குத்தான் கிடைத்தான் என்கின்ற பெருமையில் ஒருத்தி தலைநிமிர்ந்து பார்த்தால் அவன் நடுவே இருக்கிறான். இந்தக் கருத்தைக் கண்ணனுக்குப்பதில் கண்ணன் தத்துவத்தையும் ஆயர் சிறுமிகளுக்குப் பதில் பிரகிருதியின் தோற்றங்கள்

அல்லது கருத்துக்களையும் வைத்துப் பார்க்கவேண்டும். அவன் எதிரே பிரகிருதியின் அங்கமான ஒவ்வொரு எண்ணமும் சுழலுகிறது. இயங்கி ஆடுகிறது. ஆனந்த நடனம் புரிகிறது. கிருஷ்ண மயமாகிறது. பொறுமை, தற்பெருமை முதலியன கொண்டு அகங்காரம் பெற்றால் அந்தத் தன்மையை இழந்து விடுகிறது. இந்தக் கருத்துப் புரியாமல் கண்ணனை மட்டமான கருத்தில் கோபியர் லோலன் என்று குறிக்கின்ற புத்தியை என்னவென்று சொல்வது!

காலத்திற்கேற்றவாறு இலக்கிய நடைகள் மாறுகின்றன. ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒரு காதலன் காதலியிடம் பேசின முறைக்கும், இன்று இலக்கியத்தில் சித்தரிக்கும் முறைக்கும் மாறுபாடு இருக்கும். அதற்காக ஷேக்ஸ்பியரை 'வீண் பேச்சை அதிகம் வளர்த்துகிறார்' என்று சொல்லமுடியுமா?

ஆத்மா இருந்தாலே பிரகிருதியின் எல்லா அங்கங்களும் மலர்கின்றன. வஸந்த ருது வந்தால் ஒவ்வொரு உயிரும் அதன் ஒவ்வொரு அங்கமும் மலர்ச்சி அடைகிறது. பிரகிருதிக்கு, நித்திய வஸந்தம் ஆத்மாவின் இருப்புத்தான். அது செயல்படுவதில்லை. அது ஒவ்வொரு பகுதிக்குள்ளும் சென்று வேலை செய்யவேண்டுமென்பதில்லை. உடல், மனம், புத்தி இவைகள் தான் இயங்குகின்றன. அவைகள் வேலை செய்ய ஒளிதரும் பொருளாய் இருப்பது ஆத்மா. இதற்கு மற்றொரு உதாரணம் சொல்லலாம். மதுரையை ஒரு ராஜ்யமாகவும், அதற்கு ஒரு அரசன் இருப்பதாகவும் கொள்வோம். அரசன் தன் மந்திரியிடம் 'வருகின்ற வெள்ளிக்கிழமையன்று கோவிலுக்குப் போகலாம்' என்று முணுமுணுத்தால் போதும். என்ன நடக்கிறது என்று பாருங்கள். மந்திரி தனக்குக் கீழேயுள்ள அதிகாரிகளிடம்

சொல்ல அவர்கள் ஒவ்வொருவராய் தனக்குக் கீழேயுள்ளவர் களிடம் சொல்கிறார்கள். கோவிலிலுள்ள பூசாரி வரையில் செய்தி வந்து சேருகிறது. எல்லோரும் ஒரு துடிப்புடன் ஏற்பாடு செய்ய ஆரம்பிக்கிறார்கள். குறிப்பிட்ட நாளில் ராஜா வரும் நேரத்திற்கு முன்பே அவர் பவனி வருகின்ற தெருவெல்லாம் வீரர்கள் மக்களை ஒழுங்குபடுத்த வந்து சேர்ந்து விடுகிறார்கள். மக்களும், வேண்டாம் வேண்டாம் என்றாலும் வந்து அங்கே தான் கூடுகிறார்கள். இவ்வளவு வேலையும் எப்படி நடந்தது! அரசன் மனதிலே ஆசை எழுந்தது உண்மைதான். ஆனால் அவன் ஒன்றும் செய்ய வில்லை. அரச அதிகாரத்திற்கு அந்த சக்தி உண்டு. அரசனின் முணு முணுப்பு ஊரையே ஆட்டி வைத்து விட்டது. அந்த மந்திரி இவ்வளவு செய்ய முடிந்ததே, எதனால்? அந்த அரசன் அவருக்கு அதிகாரம் தந்திருந்ததால் தானே! அதைப் போலத்தான் ஒவ்வொரு அதிகாரியும் அந்த அரச அதிகாரத்தின் காரணமாக இயங்க முடிகிறது. அப்படியேதான் செய்கைகளெல்லாம் பிரகிருதியினுடை யதே, ஆத்மா ஒன்றும் செய்வதில்லை.

கர்மாணி என்றால் செயல்கள் என்று கூறினோம். எல்லாச் செயல்களையும் கருதி அவ்வாறு கூறவில்லை. பயனைக் கருதி செய்யப்படும் செயலே செயலாகும். மூச்சு விடுவதை ஒரு செயலாக நாம் சொல்லுவதில்லை. தூக்கத்திலே பக்கத்தில் படுத்திருப்பவன் குறட்டைவிட்டு நம் தூக்கத்தைக் கலைக்கிறான். புரண்டு புரண்டு உதைக்கிறான் என்றாலும் நாம் அவனிடம் கோபித்துக்கொள்வதில்லை. ஏனென்றால் உதைக்கவேண்டும் என்ற கருத்துடன் அவன் செய்யவில்லை.

## முப்பத்தொன்ருவது சுலோகம்

யதா$^{3}$ பூ$^{4}$தப்ருத$^{2}$க்$^{3}$பா$^{4}$வ
மேகஸ்த$^{3}$மனுபஸ்யதி
தத ஏவ ச விஸ்தாரம்
ப்$^{3}$ரஹ்ம ஸம்பத்$^{3}$யதே ததா$^{3}$ [31]

ஒரு கருத்து அறிவதற்குக் கஷ்டமாக மிகவும் நுட்பமாக இருக்குமானல் மீண்டும் மீண்டும் சொல்வது நல்லது. அதனல் இந்த சுலோகத்திலும் அந்தக் கருத்து சொல்லப் படுகிறது. **யதா**: எப்பொழுது **பூதப்ருதக் பாவம்** உயிர்களின் பலவகைத்தன்மை. **யோஸ்தம் அனுபச்யதி ச** அந்த ஒன்றிலேயே அமைந்திருப்பதையும் **தத:யேவ** அதிலிருந்தே **விஸ்தாரம்**: உயிர்கள் பலவகைப் படுவதையும் **அனுபஸ்யதி**: பார்க்கிருனே **ததா**: அப்பொழுது **ப்ரும்ம சம்பத்யதே**: ப்ரும்ம சம்பத்தை அடைகிருன். சுருக்கமாக அந்தத் தத்துவத்தின் உண்மையை இரண்டு விதமாகவும் அறியவேண்டும். அதன் மலர்ச்சியே எல்லாம். அந்த மலர்ச்சியினல் தோன்றுகின்ற உருவங்கள் எல்லாம் அதற்குள்ளேயே அடங்குகின்றது. இந்த இரண்டும் ஒரே உண்மையின் இரண்டு பக்கங்கள். இரண்டையும் அறிந்து கொள்ளவேண்டும். ஜலவாயு, பிராணவாயு இரண்டையும் சேர்த்தால் நீராகும் என்றல் நீரைப் பிரித்தும் பார்க்கவேண்டும். இரண்டு வாயுக்களைச்சேர்த்து நீராக்கியும் பார்க்கவேண்டும். அதேபோல உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் புரோட்டான், எலெக்ட்ரான், நியூட்ரான் என்ற மூல சக்திகளாக மாற்றலாம்என்று விஞ்ஞானம் சொல்லுகின்றது. அதை அறிய நாம் இரண்டு வகையிலும் சோதனை செய்யவேண்டும். ஒரு பொருளை மூலப்பொருள்களாக மாற்றவேண்டும், மூலப் பொருள்களை சேர்த்து அந்த பொருள்களையடையவேண்டும்.

அதேபோல ப்ரும்மமயமான மனிதன் என்றால் அவன் காட்டிலும் அப்படியே இருக்கவேண்டும். நாட்டின் சந்தைக் கடையிலும் அப்படியே இருக்கவேண்டும். இந்த உண்மையை இதைவிட அழகாக கிருஷ்ணன் அல்லது வியாசர் தவிர வேறு ஒருவரும் சொல்ல முடியாது.

## முப்பத்திரெண்டாவது சுலோகம்

அனாதி[3]த்வாந்நிர்கு[3]ணத்வாத்
பரமாத்மாயமவ்யய:
ஸரீரஸ்தோ[2]ऽபி கௌந்தேய
ந கரோதி ந லிப்யதே

**ப்ரும்மம்:** அல்லது ஆத்மா இயங்குவதில்லை என்றால் ஏன் இயங்குவதில்லை? அதற்கு மூன்று காரணங்கள் தரப்படுகின்றன.

**அனாதித்வாத்:** ஆரம்பமற்ற ஒன்று என்பதாலும் **நிர்குணத்வாத்:** குணமற்றதாலும் **அவ்ய யஹ:** அழியாதது என்பதாலும் **பரமாத்ம:** பரமாத்ம **சரீரஸ்தோபி:** சரீரத்தில் இருந்த போதிலும் கூட, **கௌன்தேய:** குந்தி புத்ரா **ந கரோதி**: செய்கிறதில்லை. **ந லிப்யதே:** மணமேற்கிறதில்லை.... நீராவி உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். நீராவி ஓடுகிறதில்லை. எஞ்ஜின் தான் ஓடுகிறது ஏன் எஞ்ஜின் ஏற்படுவதற்கு முன்னமேயே ஏற்பட்டது நீராவி. எஞ்ஜினுக்கு அது அனாதி. அதாவது ஆரம்பம் எப்பொழுதென்று தெரியாதது. நீராவி வேகமாகப்போகிறது, மெதுவாகப் போகிறது, பெரியது, சிறியது, வலுக்குறைந்தது, பிரமாதமானது என்றெல்லாம் சொல்லுவதில்லை. ஆனால் எஞ்ஜினை அப்படியெல்லாம் சொல்லலாம். ஏனென்றால் நீராவிக்குக் குணம் கிடையாது. மூன்றாவதாக நீராவி அழுவதில்லை.

அந்தப் பரம்பொருள் அனாதியானது குணமற்றது. ஆரம்பம் இல்லை என்றால் முடிவும் இல்லை. ஆகவே பிறந்து மடிவது அல்லது எழுந்து அழிவது என்பது இல்லாத பொருளுக்குக் குணமும் இருக்க முடியாது. ஆகவே அனாதியான அந்தப் பரம்பொருள் குணமற்றதாகவும் இருக்கிறது. அதுவே அழிவுமற்றது. அப்படிப்பட்ட பொருள் சரீரத்தில் இருந்தபோதிலும்கூட அது ஒன்றும் செய்வதில்லை. செய்வதெல்லாம் உடலும் மனம்-புத்தி ஆகின்ற பிரகிருதியே தான். அது ஒன்றும் செய்யாதது மட்டுமல்ல. பிரகிருதி செய்வதும் அதைப் பாதிப்பதில்லை. இதன் நாற்றம் அதற்கு ஏறுவதில்லை. அது நல்ல வாசனையாயிருந்தாலும் சரி, கெட்ட நாற்றமாயிருந்தாலும் சரி. இது எப்படி முடியும்? நாற்ற நீர் உள்ள குழியில் விழுபவன் நாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் எப்படி வெளியேறுவான்? என்று கேட்கலாம். அப்படிக் கேட்பதற்குக் காரணம் நம்முடைய புத்திக்கு நுண்மை குறைவாக இருக்கிறது என்பது தான் கூர்மையான புத்தி நுண்மையும் கொண்டிருந்தால்தான் இது புரியும். அதை எப்படியும் புரிய வைக்கவேண்டும் என்பதற்காகக்கண்ணன் அடுத்த இரண்டு சுலோகங்களில் இரண்டு உதாரணங்கள் கொடுக்கிறார்.

## முப்பத்திரண்டாவது சுலோகம்.

யதா[2] ஸர்வக[3]தம் ஸௌக்ஷ்ம்யா
தா[3]காஸம்நோபலிப்யதே
ஸர்வத்ராவஸ்தி[2]தோ தே[3]ஹே
ததா[2]த்மா நோபலிப்யதே [ 32 ]

**யதா** எப்படி **ஸர்வகதம்** எங்கும் சென்றிருக்கிற **ஆகாஸம்** வெளி **சௌக்ஷ்மியாத்** சூக்ஷ்மத் தன்மை காரணமாக **நோபலிப்யதே** பாதிக்கப்படுகிற (நாற்றம் ஏற்றுக் கொள்ளுகிற) தில்லையோ **ததா** அப்படியே **தேஹே** தேகத்தில **ஆத்மா** ஆத்மா **சர்வத்ரா வஸ்திதோ** எங்கும்

இருந்தபோதிலும் கூட நோபலிப்பயதே பாதிக்கப்படுவதில்லை. ...... ஆகாயம் அல்லது வெளி என்று நாம் சொல்வது காற்றல்ல. பொருள்கள் தங்குவதற்கு இடம் தருகிற ஒரு தத்துவத்தை நாம் ஆகாயம் அல்லது வெளி என்று அழைக்கிறோம். அவகாசம் அல்லது இடம் தருவது தான் ஆகாசம். இந்த வெளி மிகவும் சூக்ஷ்மமானது. நாதத்தையும் தாங்கக்கூடியது. மிகவும் சூக்ஷ்மமான படியினால் எங்கும் பரவி நிற்கிறது. காற்றை எடுத்து கொண்டோமானால் ஆகாயத்தைவிட அதற்கு சூக்ஷ்மத் தன்மை குறைவு. அதாவது கனம் உண்டு. ஆகவே ஊடுருவிப் பரவும் சக்தி ஆகாயத்தை விட அதற்குக் குறைவு. இந்த ஆகாயம் பரவாத இடமே இல்லை. நம் உலகத்தைத்போன்ற பல கிரகங்கள் கொண்ட பல சூரியன்கள் இந்த வெளியில் சுழன்று கொண்டிருக்கின்றன. ஒன்றையொன்று நோக்கி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. இவ்வளவையும் தாங்கி நிற்கிறது. மிகவும் சூக்ஷ்மமான பொருள் தான் எங்கும் பரவி நிற்க முடியும்.

சூக்ஷ்மமான ஒரு பொருளில் அதைவிட கனமான பொருள் தங்கலாம். ஆனால் அந்த சூக்ஷ்மமான பொருளுடன் இணைந்துவிட முடியாது. அதற்குத் தன்மணம் அல்லது குணத்தைப் பிரித்துவிட முடியாதபடி தந்துவிட முடியாது. உதாரணகாக தண்ணீரில் இருக்கும் அழுக்கை எடுத்துக் கொள்வோம். தண்ணீரைவிட அழுக்கு கனமானது. அந்த அழுக்கினால் தண்ணீர் அழுக்காவதில்லை. தண்ணீருடன் அழுக்கையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாமே தவிர தண்ணீரே அழுக்காய்விடாது.

அதைப்போலவே இந்த ஆகாயமும் அதில் தங்கும் எந்தப் பொருளாலும் பாதிக்கப்படாது. ஒரு இடம் அழுக்காய் இருக்கிறது என்று சொன்னால் அந்த இடத்திலே அழுக்கான பொருள்கள் இருக்கின்றன என்பது தான் கருத்து. ஒரு இடம் நாற்றமாய் இருக்கிறது என்றால் அந்த இடத்தின் காற்று நாறியிருக்கிறது என்று பொருள். அழுக்கையோ நாற்றம் தரும் காற்றையோ நாம் அகற்றி விட்டோமானால் இடம் சுத்தமாய்விடும்.

இடம் எப்படி நாற்றமடையாதோ அதேபோல அதற்கு எந்தப் பொருளும் நன்மணம் தந்துவிட முடியாது அதாவது அதைத் தாழ்த்தவோ, உயர்த்தவோ முடியாது. நாறச் செய்யவோ, அல்லது மணக்கச் செய்யவோ முடியாது. அதேபோலவே ஆத்மாவும் சிறப்படைதென்பதோ, மட்டமாவ தென்பதோ இல்லை. நாம் தான் கெடுகின்றோம் அல்லது நல்லாவராகின்றோம். நம் செய்கைகள் கெட்டிருக்கலாம் அல்லது சிறந்திருக்கலாம். அதேபோல சரித்திரத்தில் ஒரு காலம் நல்லது ஒரு காலம் கெட்டது என்றால் உண்மையிலே காலம் கெட்டது என்ற பொருளல்ல. அந்த காலத்தில் இருக்கும் மக்கள் செய்த செயல்கள் இழிந்திருந்தன என்பது தான் உண்மை.

இடத்தைப் பிரித்துப் பேசலாம். உன் அறை என் அறை என்று சொல்லாம். நாற்புறமும் சுவர் எழுப்பி இடத்தின் ஒரு பகுதியை யக்ஞ சாலை அல்லது வேறு ஒரு பெயரால் பேசலாம். அந்த இடத்திற்குப் பெயர் மீண்டும் மாறலாம். ஆனால் இடம் இதனாலெல்லாம் பாதிக்கப்படுவதில்லை. இடம் பெயர் ஏற்றுக் கொண்டதில்லை, 'ராஜாஜி பார்க்' என்கின்ற இடம் நாளையே 'வெல்லிங்டன் பார்க்' என்று மாறிவிடலாம். அது நாமாகச் செய்த மாற்றமே தவிர இடம் ஏற்றுக்கொண்ட ஒன்றல்ல. அதைப் போல எந்த உயிருள் இருந்தாலும் அந்தப் பொருள் மாறுவதில்லை. மனிதன் உடையளவில், உடலளவில், உணர்ச்சிகளளவில், ஏன் கருத்தளவில்கூட மற்றொருவனை விட மாறியிருக்கலாம். ஆனால் 'மனிதன்' என்கின்ற அளவில் எல்லா மனிதரும் ஒன்றே. அதைபோல இல்லை என்று சிலர் மறுத்தாலும் அடிப்படையில் ஆத்மா அகண்டமாக எல்லோருள்ளும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இதை நன்றாக புரிந்துகொள்ள அடிப்படையாக இந்த சித்தாந்தைப் புரிந்து கொண்டால் போதும். சூக்ஷ்மத் தன்மையுள்ள பொருள்களில் தங்கும் எந்தப் பொருளும் அந்த சூக்ஷ்மப் பொருளை பாதிக்க முடியாத. உதாரணமாக அழுக்கு, உடலை அழுக்காக்கலாம். மனதை அழுக்காக்கமுடியாது. சிறைக்குள் மனிதனைப் போடலாமே தவிர அவன் உள்ளத்தைச்

சிறைப்பிடிக்க முடியாது. அதாவது கனபதார்த்தங்கள் சூக்ஷ்மப் பொருள்களைப் பரவுவதிலிருந்து தடுக்க முடியாது. இதுவும் சூக்ஷ்ம—கனப் பொருள்களில் உறவைப்பற்றிய ஒரு உண்மை.

அர்ஜுனனுக்குப் புரிவதற்காகக் கண்ணன் மீண்டும் ஒரு உதாரணத்தைத் தருகிறார்.

## முப்பத்திமூன்றாவது சுலோகம்.

யதா[2]ப்ரகாஸயத்யேக:
க்ருத்ஸ்னம் லோகமிமம் ரவி:
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா[2] க்ருத்ஸ்னம்
ப்ரகாஸயதி பா[4]ரத [33]

**பாரத** ஏ பரத சிரேஷ்டா **யதா** எப்படி **ஏக: ரவி:** ஒரு சூரியன் **இமம் லோகம் க்ருத்ஸ்னம்** இந்த உலகம் எல்லாவற்றையும் **பிரகாஸயேதி** ஒளி பெறச் செய்கிறதோ **ததா** அப்படியே (**ஆத்மா** ஆத்மா) **க்ஷேத்ரம் க்ஷேத்ரீ** க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரத்திற்கு உரியவனையும் **க்ருத்ஸ்னம்** பூராவாக **பிரகாஸயேதி** ஒளிபெறச் செய்கிறது.

இந்த சுலோகத்தில் சூரியனுடைய உதாரணம் கொடுக்கப்படுகிறது. சூரியன் எல்லா இடத்தையும் ஒளிபெறச் செய்கிறது. புனிதமான இடமாயிருந்தாலும் சரி, பாபம் நிறைந்த இடமாயிந்தாலும் சரி அதன் ஒளி செல்லுகிறது. கொலை நடக்கும் இடத்திலும் சூரியன் பிரகாசிக்கிறது. உயிரை வாழ்விக்கும் யக்ஞம் நடக்கும் இடத்திலும் சூரியன் பிரகாசிக்கிறது. மலம், அழுக்கு நிறைந்த இடத்திலும் சூரியன் ஒளி வருகிறது. சுத்தமான இடத்திலும் சூரியன் பிரகாசிக்கிறது. ஆனால் பிரகாசமடைந்த பொருளின் தன்மையால் சூரியன் பாதிக்கப்படுவதில்லை. கங்கையில் சூரியனுடைய கிரணங்கள் முழுகுகின்றன. அதனால் சூரியனுக்குப் பெருமை ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது. அதேபோல

சூரியன் சாக்கடையில் முழுகிவிட்டான், அதனுல் சூரியன் கெட்டுவிட்டான் என்றுசொல்ல முடியாது. அந்த சூரியனைப் போலவே தான் அந்தப் பரம்பொருள் க்ஷேத்திரன் க்ஷேத்திரி இரண்டையும் பிரகாசிக்கச்செய்கிறது.

க்ஷேத்திரி புதுச் சொல். அனுல் க்ஷேத்ரக்ஞன் என்ற சொல்லை க்ஷேத்திரத்தை அறிந்தவன் என்ற பொருளில் உபயோகிக்கிருன். க்ஷேத்திரி என்பதும் க்ஷேத்திரத்திற்கு உரியவன் என்ற பொருளில் க்ஷேத்ராக்ஞனே தான் க்ஷேத்ரக்ஞன் அந்த பரம்பொருளின் பிரகிருதிக்கேற்ற பிரகிருதியினுல் உண்டான தோற்றமே தான் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆகவே இந்த "சாயல் உறையும் பிரகிருதியையும் அந்தப் பரம்பொருள் தான் பிரகாசிக்கச் செய்கிறது. இந்த சாயலும் அதன் ஒளியே தான்" அதாவது நான் என்கின்ற ஜீவத்வ பாவனை பிரகாசிப்பதும் அதனுல் தான். அது செய்கிற வேலை பிரகாசிப்பதும் அந்தப் பொருளின் ஒளியால் தான் நான் என்னை அறிகிறேன். என்று சொல்லும் அறிவும் அதன் ஒளியைப் பெற்றுத்தான் சொல்லுகிறது. அதைப்போல் எனக்குத் தெரியாது என்று சொல்லுகின்ற அறியாமையும் அதன் ஒளியால் தான் உயிர் பெறுகிறது.

வேதாந்தத்தில் இந்த உண்மை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கப்படுகிறது. சூரியனை மறைக்கும் மேகத்தையும் மறைக்கப்பட்ட சூரியனின் ஒளியைக் கொண்டு தான் தெரிந்து கொள்ளுகிறோம். அதைப்போலவே கடவுள் இல்லை என்று சொல்லுகின்ற ஆற்றலுக்குப் பின்னும் அந்தத் தத்துவம் தான் ஒளி தருகிறது. ஆகவே சூரியனைப்போல இந்தப்பரமாத்மா எல்லாவற்றுக்கும் ஒளி தருகிறது. ஆனுல் எதனுலும் அது பாதிக்கப்படுவதில்லை.

## புலி - ஆடு - புலி.

மேலே இரண்டு உதாரணங்கள் கொடுக்கப்பட்டன. ஒன்று ஆகாசத்தைப்பற்றியது. மற்றொன்று சூரியனைப் பற்றியது. ஆகாசம் தாங்கும் பொருள் "நல்லது கெட்டது

இரண்டும் அற்றது!'' ஒன்றும் அதை எந்தவிதத்திலும் பாதிக்க முடியாது. அதே போல சூரியன் பிரகாசிக்கச் செய்யும் எந்தப் பொருளும் சூரியனைப் பாதிப்பதில்லை. ஆகாசம் பரவாத இடமில்லை. சூரியன் ஒளி தராத இடமில்லை.

இவ்விரண்டையும் போல எங்கும் இருந்தாலும் பரமாத்மன் பாதிக்கப்படுவதில்லை. அது மிகவும் சூட்சுமமான சக்தியாகும். எண்ணங்களையும்விட சூட்சுமமானது அது. எங்கும் பரவி நிற்கிறது.

அதைக் கடவுள் என்றோ தெய்வம் என்றோ சில சமயம் குறிப்பிடுகிறோம். அந்த நிலையில் அதன் கருத்தை நன்றாய் உணரவேண்டும். கடவுள் அல்லது தெய்வம் என்ற தத்துவம் மக்கள் சுலபமாகப் புரிந்துகொள்ள என ஏற்படுத்தப்பட்டது. மிகவும் உயர்ந்த புத்தி உருத்தந்ததாகும் அது.

நன்றாகச் சிந்தித்தோமானால் உலகில் உள்ள ஒரு உண்மை வெளியாகும். அதைத் தலைசிறந்த விஞ்ஞானிகளும் கூட ஒப்புக்கொண்டேயாகவேண்டும். எல்லாவற்றிற்கும் பின் ஏதோ ஒரு சக்தி வேலை செய்துகொண்டிருக்கிறது. செய்துகொண்டு இருக்கத்தான்செய்கிறது.

உதாரணமாக நாம் நம் குடும்பத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்கிறோம். குழந்தையை வளர்ப்பதாகச் சொல்கிறோம். உண்மைதான். நாம் தான் உழைக்கிறோம். சம்பாதிக்கிறோம். குழந்தைக்கு உணவு தயார் செய்கிறோம், அளிக்கிறோம். ஆனால் அது மட்டும் போதுமா? குழந்தைக்கு வாயில் உணவை எடுத்து ஊட்டும் வரையில்கூட நாம் செய்யலாம். அதற்கு மேல்?

உணவு ஊட்டம் தந்து வளர்க்கும் சக்தியை நம்மிடமிருந்தா பெற்றுக்கொண்டது? அல்லது குழந்தைக்குத் தான் அதை ஜரித்துத் தனதாக்கிக் கொண்டு வளரும் சக்தியை நாம் தரமுடியுமா?

இதை உணர்ந்தால் அவன் நாஸ்தீகனுயிருந்தாலும் கூட இந்த உண்மையை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஒரு "பெரும் சக்தி" - அதைக் "கடவுள்" என்று அழைத்தாலும் சரி சக்தி என்றே அழைத்தாலும் சரி - அது இருக்கத்தான் செய்கிறது.

மீண்டும் ஆழ்ந்து யோசித்தால் அந்தச் சக்தியைப்பற்றிய மற்றொரு உண்மையையும் தெரிந்துகொள்ளலாம். பொருள்கள் ஏற்படுகின்றன. பிறகு அழிகின்றன. இந்த இரண்டு நிலைகளும் ஒன்றிற்கொன்று தனியாக நிகழ்கின்றன. உயிர்களோ, கல் மண்போன்ற பொருள்களோ சிருஷ்டியாகின்றன. பிறகு அழிகின்றன. இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே அவை வாழ்கின்றன. சிருஷ்டி - சம்ஹாரம் இரண்டும் தனித்தனியே கவனிக்க முடிகிறது. அதனுல் ஸ்திதி என்ற வாழ்வை நாம் அறிய முடிகிறது. ஸ்திதி இல்லை என்றுல் சிருஷ்டியும் அழிவும் ஒரே காலத்தில் நிகழ்ந்துவிடும். அந்த நிலையில் 'வாழ்வு' இருப்பது நமக்குத் தெரியாது. இந்த மூன்று அற்புதங்களையும் தனித்தனியே நாம் அறிய முடிகிறது. இந்த சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் என்ற முத்தொழில்களும் அந்தச் சக்தியின் விளையாட்டே.

சாதாரண மனிதனிடம் 'சக்தி' என்றுல் அவன் எப்படி மனதுக்குள் ஏற்றுக்கொள்வான்? அதற்காக இந்த மூவகைச் சக்திகளையும் மூன்று முதல் தெய்வங்களாக உருவகப்படுத்தி அறிகிருேம். இந்த முத்தொழில் தெய்வங்களான பிர்மா, விஷ்ணு, சிவன் இவர்களை நாம் மறக்கவுமில்லை, மறுக்கவுமில்லை. நாம் கீதையில் இந்தப் பதின்மூன்ருவது அத்தியாயத்தில் இம் மூவருக்கும் ஆதாரமான அந்த அடிப்படை உணர்வைப்பற்றி மட்டும் பேசுகிருேம்.

சிருஷ்டி செய்யும் விஷ்ணுவுக்கும் 'அந்த உணர்வு' இருந்து தானேயாகவேண்டும். அந்த உணர்வைப்பற்றித் தான் நாம் பேசுகிருேம். தெய்வங்கள் மனிதர்கள் உயிர்கள் எல்லாவற்றிலும் பொதுவாய் நடம்புரியும் அந்த 'ஞான உணர்வே' பேசப்பட்டு வந்தது. அது எங்கும் எப்பொழுதும்

இருக்கிறது. வேதாந்தம் எதனுலும் கட்டுப்படுத்த முடியாத அந்தத் தத்துவத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

நமக்குக் கடவுள் அல்லது தெய்வம் வேண்டும். அவன் நம்முடைய ஒவ்வொரு செயலையும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். நல்லது செய்தால் பரிசு தரவேண்டும். அல்லது கெட்டது செய்தால் தண்டனை தரவேண்டும். அதாவது எப்பொழுதும் நமக்குத் தந்தைபோல் நின்று கட்டிக் காக்க வேண்டும் என்று எண்ணலாம் சிலர். அவர்கள் 'இந்தத் தத்துவப் பேச்சுப்போதாது' என்று புகார் செய்யலாம். அப்படிப்பட்ட புகார் வீண். ஏனென்ருல் நாம் பேசி அறிய எடுத்துக்கொண்ட விஷயமே வேறு.

ஒருவன் பரமாத்மனை உணர்ந்தால் உடனே அவன் பந்தத்திலிருந்து விடுபடுகிருன். அவன் எப்படியிருந்தாலும் சரி. பாபியாக இருந்தாலும் சரி, பெரிய மஹாத்மாவாக இருந்தாலும்சரி. அந்த நிலையை அடைந்த பிறகு முன் வாழ்க்கையின் காரணமாக ஒரு பாகுபாடும் செய்யப்படுவ தில்லை. 'எங்கள் மதத்துக்கு வா' என்று அழைத்து மதம் மாற்றுகிருர்கள் கிறிஸ்தவர்கள். ஆனுல் மதம் மாறிய புதுக் கிறிஸ்தவர்களுக்குப் பழங் கிறிஸ்தவர்கள் சர்ச்சிலே (மாதா கோயிலில்) ஒதுங்கிய இடத்தைத் தந்து பாகுபாடு செய் கிருர்கள். முன்பு ஹிந்துவாக இருந்து இப்பொழுது மாறிய வன் என்று எண்ணி ஒதுப்புறமாக இடம் தருகிருர்களே, அது சரியா? சதி அல்லவா?

ஆனுல் தியான மூலம் எவன் அந்தப் பரம்பொருளை உணர்ந்தாலும் உடனே அவன் இன்ப நிலையை அடைகிருன். அவன் பழம் வாழ்க்கை அதைப் பாதிப்பதில்லை. ஏனென் ருல் முறைப்படி ஆன்மவித்தை பழகும் அவன் மனம் - புத்தி சஞ்சலம் நீங்கி அமைதி அடைந்து தெளிந்து விடு கிறது. அதில் அவன் தன் உண்மை சொரூபத்தைப் பார்த்து விடுகிருன். பிறகு அவனுக்குச் சஞ்சலம் ஏது? பழைய வாழ் வின் வாசனை ஏது? வேதனைதான் ஏது? அந்தப் பரம் பொருள் எதனுலும் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் எந்த

முறையில் அந்தப் பொருளை அடைந்தாலும் பிறகு இன்பமே தான்.

இந்தக் கருத்தைப் புரியவைக்கத்தான் ஆடுகளுடன் வளர்ந்த புலிக்குட்டியின் கதை சொல்லப்படுகிறது. தன்னை மறந்த புலிக்குட்டி ஒன்று ஏதோ சந்தர்ப்ப விசேஷத்தால் ஆடுகளுடன் வளர்ந்து வந்தது. தன்னையும் மறந்து ஆடாகவே வளர்ந்தது. ஒரு முறை ஒரு புலிவந்து ஆடுகளைத் தாக்கிற்று. அந்த சமயம் இந்த ஆட்டுப் புலியும் (புலி - ஆடு) ஆடுகளைப்போலவே "மே மே" என்று அலறி ஓடிற்று. புலி 'இது நம் குலத்தது' என்று அறிந்து மனம் நொந்து அதையே பிடித்து எடுத்துக்கொண்டு ஒரு குளக்கரைக்குச் சென்றது. அங்கே ஆட்டுப் புலி (புலி - ஆடு) குளத்தில் தன் உருவத்தைப் பார்த்தது. என்ன ஆச்சரியம்! பார்த்தவுடன் அது தன் புலித்தன்மையை அடைந்து பயத்தையும் உதறி எறிந்து புலிக்குள்ள குணங்களையும் பிடித்துக்கொண்டது.

அதேபோல பரமாத்மா பாபியுமல்ல, அசடனுமல்ல. ஒரு முறை ஜீவன் நிர்மலமாகித் தெளிந்த மனம்-புத்தியில் இதைப் பார்த்துவிட்டானானால் பிறகு அவன் 'புலி' தான். பிரகிருதியுடன் வளர்வதால் அந்தப் புலிக்குட்டி ஆட்டைப் போல் அலறுகிறது. மனம் புத்தி தெளிவடைந்து அதில பிர்மத்தைக் காணவேண்டும் என்றால் மனம்-புத்திக்கு எந்த வகைப் பயிற்சிகள் தரவேண்டும்? அந்தப் பதினெட்டுவகைப் பயிற்சிகள் முன்னமேயே சொல்லப்பட்டிருக்கின்றன.

க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞயோரேவ
மந்தரம் ஞானசக்ஷுஷா
பூ⁴தப்ரக்ருதிமோக்ஷம் ச
யே விது³ர்யாந்தி தே பரம் [ 34 ]

இந்த சுலோகம் இதுவரை சொல்லிவந்த எல்லாக் கருத்துக்களையும் சுருக்கித் தருகிறது.

**ஏவம்:** இம்மாதிரி யே: எவர் **ஞான சக்ஷுஷா:** ஞானக் கண்களால் **க்ஷேத்ரக்க்ஷேத்ரக்ஞயோ:** க்ஷேத்திரம் க்ஷேத்திரக் ஞன் இவர்களுடைய **அந்தரம் வித்தியாசத்தை விது:** அறிகிறார்களோ **தே** அவர்கள் **பூதப்பிரகிருதி மோக்ஷம் ச:** பூதப் பிரகிருதியிலிருந்து மோக்ஷத்தையும் **பரம்:** பரம கதியையும் அடைகிறார்கள்.

க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞன் எல்லாம் என்ன என்பது இதுவரை தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுவிட்டது. பரமாத்மாவின் சாயலாக ஜீவன் எப்படிப் பிரகிருதியுடன் சம்பந்தப்படுகிறது என்பதும் தொடுத்துக் கூறப்படுகிறது. அதை அறிவதற்கு ஆன அறிவையே ஞானசக்ஷு என்று அழைக்கிறார் கண்ணன். பதினெட்டு வகைப் பயிற்சிகளால் ஞானமயமாக ஆக்கப்பட்ட மனம்-புத்தியே ஞானசக்ஷு ஆகும். ஆகவே ஞானக் கருவி. அதன் உபயோகம் கொண்டு தான் அதற்குள்ளே அந்த உண்மையை அறியமுடியும். க்ஷேத்ரம் வேறு தான்; க்ஷேத்ரக்ஞன் வேறு தான். ஆனால் புருஷனாகிற அது க்ஷேத்ரமாகிற பிரகிருதியுடன் தன்னை ஒட்டவைத்துக் கொண்டு மேலும் மேலும் பந்தத்தை ஏற்றுக்கொள்கிறது. அது உண்மையை அறிந்தால் மட்டமான நிலையிலிருந்து உயர்ந்து பிரகிருதியுடன் ஒட்டி அலையும் சங்கடத்திலிருந்து மோக்ஷம் அடையலாம்.

கீழ்நிலையை விடுவதால் மட்டும் போதாது. ஆற்றின் இந்தக் கரையை விட்டுவிட்டதால் மட்டும் லாபம் இல்லை. நீரைக் கடந்து அக்கரையை அடைந்த பிறகல்லவோ செயல் முடிவடையும்! ஊருக்குக் கிளம்புகிறவன் நம் வீட்டை விட்டுப் புறப்பட்டான் என்று சொல்வதால் மட்டும் ஆகாது. அவன் தன் ஊருக்குச் சென்று கடிதம் எழுதினால் தான் நம் மனது நிம்மதியடைகிறது. போகிறவன் வயது வந்தவன் தான், கெட்டிக்காரன்தான்; டிக்கட்டைத் தொலைத்துவிட மாட்டான்; வண்டியும் சரியாகத்தான் போகும். ஏறின வண்டியும் சரிதான் என்றாலும் போய்ச்சேர்ந்து "சுகமாகப் போய்ச் சேர்ந்தேன்" என்ற கடிதம் வரும் வரையில் நாம் நிம்மதியடைகிறதில்லையே! அதைப்போல பூதப்பிரகிருதியிலிருந்து விடு

படுவது ஒரு இடத்தை விட்டுப் புறப்பட்டமாதிரிதான். அவன் அக்கரையையும் சேரவேண்டுமே? சேருகிறானா?

ஆம்! பரம் யாந்தி அந்த நிலையை அடைகிறான்.

ஆசைகளை விட்டுவிடு. சம்சாரத்தைத் துற. அவைகளால் தான் துயர் என்று சொன்னால் ஒருவன் உடனே செய்யத்துணிகிறதில்லை. சம்சாரத்தில் இருப்பது துன்பம் தான். ஆனால் சில சமயங்களில் கிடைக்கிற இன்பமும் தொலைந்து விட்டால் என்ன செய்கிறது? என்று அவன் கேட்கலாம். ஆகவே பூதப்பிரகிருதியில் ஒன்றி நிற்கும் நிலையிலிருந்து விடுதலை அடைபவன் கண்டிப்பாக பரமகதியை அடைகிறானா என்ற கேள்விக்குக் கண்ணன் பதில் சொல்கிறான். "ஆம் நிச்சயமாக அடைகிறான்" என்பது தான் அந்தப் பதில்.

அந்த நிலையை அடைந்தால் என்ன லாபம்? ஒரு முறையாவது அந்த நிலையை அடைய முயன்று வெற்றியும் கண்டவன் உண்மையை அறிகிறான். 'தான் ஆன்மாவே' என்ற உணர்ச்சி வந்தவன் உலகில் பழகுவதே தனியாக இருக்கும். அவனை உலகக் கஷ்டங்கள் அலைக்க முடியாது. கவலைத்தவுடன் உள்ளே சென்றுவிடுவான். தைரியம் வந்தவுடன் உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்துவிடுவான். அவனை ஒன்றும் கட்டுப்படுத்த முடியாது. அவன் தெய்வமயமான வாழ்க்கையை வாழ முடியும்.

இது பதிமூன்றாவது அத்தியாயத்தின் சாரம். பதிமூன்றாவது அத்தியாயம் கீதையின் தலைசிறந்த அத்தியாயம். அதனால் தான் பதிமூன்றாவது அத்தியாயம் இல்லை என்றால் கீதை, கீதையாய் இருக்காது. அதாவது ஆத்ம பரமாத்ம தத்துவத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. பதிமூன்றாம் அத்தியாயம் இல்லாவிட்டால் கீதை இக வாழ்க்கைக்கான வெற்று விதித் தொகுப்பாக மட்டுமே இருந்திருக்கும். "வேதாந்தம் என்கிற இந்தச் சக்தி தரும் சாரப்பகுதி இல்லா

மல் போய்விட்டிருக்கும்'' என்று சிலர் முடிவு செய்கின்றனர். நாமும் அதை ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

## சங்கல்ப வாக்கியம்.

ஓம் தத்ஸதி3தி
ஸ்ரீமத்3ப4க3வத்2கீ3தாஸூபநிஷத்ஸு
ப்3ரஹ்மவித்3யாயாம் யோக3ஸாஸ்த்ரே
ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே3 க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ
விபா4க3யோகோ3 நாம த்ரயோத3ஸோ'த்4யாய:

ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் இது சொல்லப்படுகிறது. கீதை மஹாபாரதத்தில் வியாசர் எழுதும்பொழுது இந்த சங்கல்ப வாக்கியம் இருந்தல்லை. ஆனால் பின்னால் தொகுக்கப்பட்டு மக்களுக்கு உதவப்பட்டபோது இந்த வாக்கியம் சேர்க்கப்பட்டது. முதன் முதலில் இதைச் சேர்த்தவரை, அவர் யாராயிருந்தாலும் சரி நாம் வணங்குகின்றோம்.

இதன் மூலம் நமக்கு ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்பும் கிடைக்கிறது. அதனால் அந்த அத்தியாயத்தின் உட்பொருளைப் புரிந்துகொள்ள ஏதுவாகிறது. அதையும் விட இன்னும் பெருமை வாய்ந்த ஒரு விஷயம் உண்டு. கீதை வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுக்கும்போது இந்த சங்கல்ப வாக்கியத்தைச் சொல்லுவதனால் பெரும் லாபம் ஏற்படுகிறது. முதலில் ஒரு அத்தியாயம் முடிந்து மற்றொன்று ஆரம்பிக்கிறது என்று புரிந்துகொள்ளலாம். அந்த வாக்கியத்தை ஒவ்வொரு பகுதியாகப் புரிந்துகொண்டால் மற்றொரு பெருமையும் தெரியும்.

**ஓம்** அந்தப் பரம தத்துவத்தின் நாதமயமான பெயர்.

**தத்ஸத்** அதுவே உண்மை - இந்த தத்ஸத் என்பதை அந்த வேதாந்தக் கருத்துடன் இணைக்கவேண்டாம். ''அதுவே உண்மைப் பொருள்'' என்ற பரம தத்துவ விசாரணையல்ல இது. எளிய கருத்தில் அந்த அத்தியாயத்தில் சொல்லப்

பட்ட பொருள் உண்மை என்று இது சொல்கிறது. ஆழ்ந்து சிந்தித்தால் இப்படிச் சொல்லுவதினால் ஏற்படும் லாபம் என்ன என்று தெரியும். ஒரு அத்தியாயம் முடிந்தவுடன் 'ஆம், உண்மை தான்' என்று படித்தவன் சொல்லவேண்டும் என்றால் அவன் எந்த நிலையில் சொல்வான்? சொன்னதை நன்றாகபுரிந்துகொண்டு, சொல்லப்பட்ட கருத்துக்களின் ஆழத்தையும் அதன் தொடர்பையும் அவை குறிக்கும் பொருளையும் கண்டிருந்தால் ஒழிய அவன் அவ்விதம் சொல்லமாட்டான். எனவே பரம்பரை பரம்பரையாக நம் முன்னோர்கள் ஒவ்வொரு அத்தியாயத்திற்குப் பின்னும் உண்மை உண்மை என்று சொல்லிவந்திருக்கிறார்கள். இன்றிருக்கும் நம்மைவிட அவர்கள் எவ்வளவோ சிறந்த, தெளிவான, அமைதியான புத்தியைக் கொண்டிருந்தவர்கள். அவர்கள் உண்மை என்று சொன்னால் அது உண்மையாகத்தான் இருக்க முடியும். இன்று நாம் அதை மறுக்க முடியாது. நமக்கு அதற்குத் தகுதியும் கிடையாது. நம்முடைய புத்தி, அவர்களுடைய புத்தியுடன் ஒத்திட்டுப்பார்த்தால், கோணலானது, அசட்டுத் தனம் நிரம்பியது, சதைப் பிடிப்பற்றது. ஆகவே அதை மறுப்பதை விட்டு அதை உண்மை என்று தெரியும் வரையில் படித்துச் சிந்தித்து உணரவேண்டும்.

**ஸ்ரீமத் பகவத் கீதாஸு** ஸ்ரீமத் பகவத் கீதையில்

**உபநிஷத்ஸு** உபநிஷதங்களில் - உபநிஷதக் கருத்துக்கள் மிகவும் நுண்மை வாய்ந்தவை. நுண்மை என்றால் மிகவும் பயங்கரமான நுண்மை. அதே போல மிகவும் புரியாத அளவிற்கு அது தன்னைப்பற்றிப் பேசுகிறது. அதனால் தான் அது புரிய வேண்டும் என்பதற்காக புராணங்களில் புதைத்துத் தரப்பட்டது. அது புரியாமல் புராணங்களை வாசித்தால் அவை அர்த்தமற்ற சுவையற்ற கதைகளாகி விடும். தீர்ந்த வேதாந்திகள் புராணங்களை லக்ஷியம் செய்யமாட்டார்கள். ஆனால் சாதாரண மக்களுக்கு உபநிஷதக் கருத்துக்களை நேரே சொன்னால் புரியாது. கீதையை உபநிஷதத்துடன் ஒத்திட்டிருக்கிறார்.

**ப்ரும்ம வித்தியாயாம் யோக சாஸ்த்ரே** கீதைப்ரும்மத்தைப் பற்றி அறியும் வித்தையைப் போதிக்கிறது. அதேசமயத்

தில் அது யோக சாஸ்திரமும் ஆகும். அது வேதாந்தத்தின் சித்தாந்தங்களையும் கூறுகிறது. அந்த சித்தாந்தங்களைக் கைப்பற்றுவதற்குகான நேரடி வழியையும் கூறுகிறது. அப்படிப்பட்ட கீதை ஸ்ரீகிருஷ்ணார்ஜுன ஸம்வாதமாக ஏற்பட்டது. அந்தக் கீதையில் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவிபாக யோகம் என்று பெயருள்ள இந்த அத்தியாயம் பதிமூன்றாவது என்று சொல்லி சங்கல்ப வாக்கியம் முடிகிறது.

## முடிவுரை.

நாம் இதுவரையில் பேசி வந்ததெல்லாம் நம் மதத்தை பற்றியவிஷயம். என்றாலும் அது அழுத்தமாக ஒருவிஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறியிருப்பதைக்காணலாம். வாழ்க்கை நன்னெறியில் செல்லவேண்டும் என்பதே அது. அதற்காக மனதிற்கும் புத்திக்கும் கொடுக்கவேண்டிய பதினெட்டு பயிற்சிகள் சொல்லப்பட்டன. அவை தவிர கிருஷ்ணன் தனக்குப் பிரியமான பக்தன் யார் என்று விவரிக்கும்போது நீதியான வாழ்க்கையின் முழு லக்ஷணங்களையும் கூறுகிறார்.

இவ்வளவு இருந்தும் இன்று மதம் அந்தப் பகுதியை மறந்துநிற்கிறது. ஞான நிலையை அடைந்தவன் கூட வாழ்க்கையில் தப்பிதம் செய்ய முடியாது. பக்தன், ஞானி இவர்களையும் கூட கண்ணன் கட்டுப்படுத்தியிருக்கிறார். மதத்தின் இந்த உண்மைப் பகுதியை அறிந்து அதன்படி மக்கள் வாழ ஆரம்பித்தார்களானால் நாடு எல்லாத்துறையிலும் முன்னேறி விடும். இன்று அரசியலில் தலைவர்கள் நன்னெறிவேண்டும் நன்னெறிவேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்கள் உண்மையில் அவ்விதம் விரும்பினால் மதப்பற்றற்ற சர்க்கார் என்று சொல்லிக் கொள்ள முடியாது. மதப்பற்றற்ற சர்க்கார் மக்களை மதமற்றவர்களாக மாற்றிவிடும். உண்மை, மதமற்ற வாழ்க்கை நற்குண நற்பண்புகளை அறிய இயலாது.

இது எல்லா மதத்திற்கும் பொருந்தும். மதத்தின் சிறப்பு ரிஷியின் தாடியிலோ அல்லது பாதிரியின் அங்கியின் நுனியிலோ இல்லை. கோபுரத்தின் உயரத்திலோ அல்லது மாதாகோயிலின் முடியின் உயரத்திலோ இல்லை. சிவலிங்கத்

திலோ அல்லது சிலுவை நுனியிலோ இல்லை. உள்ளத் தூய்மை, நன்னெறி வாழ்வு இவைகளை எல்லா மதமுமே அழுத்தமாகச் சொல்லியிருக்கின்றன. ஆனால் நாம் எவ்வளவு அழகாக "மேள தாளத்"துடன் அந்த வாழ்வின் பெருமையிலிருந்து இழி நிலைக்கு வந்துவிட்டோம்.

இன்று நாம் இருக்கும் நிலையிலிருந்து மேலேறியாக வேண்டும். அதற்கான முயற்சியை கையைக் காலை ஆட்டி செய்தேயாக வேண்டும். ஆனால் என்ன பரிதாபம்! நாம் இந்த "புதை மணலில் கழுத்தளவு இறங்கிவிட்டோம். கரையேறுவதற்கென்று கையைக் காலை ஆட்டினாலும் இன்னமும் கீழே போய் விடுவோம் போல் இருக்கிறது. என்றாலும் கடைசி வழியாக முயற்சி செய்வதற்கு ஒரு உறுதியான வழியுண்டு. அது என்னவென்றால் நம் பண்பாட்டின் பாரம்பரியத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது உள்ளே போகாமல் தங்கியிருக்கலாம். பிறகு நமக்கும் பலம் வரும். வெளியிலிருந்து உதவியும் வரும். நாம் முன்னேறுவோம். நாடு முன்னேறும். எல்லாம் சுபம் ஆகும்.

சுபம்

★

ACL-FTS
00221